[illegible]

Vl. No. 17 26 Apri 1928

JL
m211, 1128 KN
N28.1.17
189000.

376

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஸு ஏப்ரல்மீ 26உ [No. 17.

REGISTRAR OF BOOKS 8-MAY 1928 MADRAS

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 321 |
| 2. | சாந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 323 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 327 |
| 4. | தமிழ்ப் பாடம் | 330 |
| 5. | பிரடரிக் நீஷேயன் T. R. இராஜகோபால் | 332 |
| 6. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 334 |
| 7. | பழமுதிர் சோலை, "சபரி" | 337 |
| 8. | வர்த்தமானம் | 339 |


## கலா நிலயம்.

### பெற்றோர் கற்றல்.

189000

நாட்டினது நலத்தை நாடுவோர் யாவரும், தெரிந்தோ தெரியாமலோ, சிறுவர்க்கும் இளைஞர்க்கும் ஏற்றதாய பாடசாலைகள் சீர்பெற்றுப் பெருக வேண்டியது மிக்க அவசியமெனப் பாவித்து விவரிக்கின்றனர். இது தக்கதே. எனினும் பொது ஜன இயக்கங்கள் யாவையும் போலவே இக்கல்வித் துறையிலும் நினைப்பதொன்றும் செய்வதொன்றுமாய் முடிகின்றது. எண்ணியபடி கல்வியும் வளரவில்லை. வளர்ந்த வரையிலும் எண்ணிய பயனும் அளிப்பதில்லை.

வளர்ச்சியும் வளர்ந்தவளவு பயனும் இல்லாதது நன்றாகத் தெரியவரவே, மூன்று தலைமுறைகளாகப் பாடசாலைகளையும் பாடங்களையும் கற்பிக்கும் முறைகளையும் பரிசைஷ வகைகளையும் பற்பலவாறு திருத்தியமைக்க முயன்று பார்க்கின்றனர். ஆயினும் என்? ஒன்றுந் திருந்தமாட்டேன் என்கின்றது. திருத்தித் திருத்தி வைத்தாலும் அது கோணல்மேல் கோணலாய்ப் போய்க்கொண்டு வருவதைக் கண்டு அடங்காக் கோபம் கொள்கிறோம். இங்கிலீஷ் படித்துப் படித்துப் பிள்ளைகள் இளைத்துப் போய் விடுகின்றன ரென்று மக்களைப் பார்க்குந்தோறும் பரிதாபம் கொள்கின்றோம் ஒருபோது. புத்தகங்கள் தக்கனவாயில்லை யென்று புலம்புவோம். பாடங்கள் அதிக மென்போம், குறைவு என்போம். வாத்தியாருக்குச் சம்பளம் போதாதென்போம், அதிக மென்போம். பாட முறையில் பழுதுண்டு என்போம், பரிசைஷ கடினம் என்போம். ஜனங்களுக்குக் கருத்தில்லை யென்போம். அரசாங்கத்தார் ஆதரிப்பதில்லை யென்போம். ஆரம்பக் கல்வி யென்போம், கட்டாயக் கல்வி என்போம், இலவசக் கல்வி யென்போம். அதிகாரம் யார் கையில் இருக்க வேண்டுமென்று ஆரவாரஞ் செய்வோம். மற்ற நாடுகளில் படித்தவர் படிக்காதவர் கணக்கெல்லாம் எடுத்தாராய்ந்து நெட்டுயிர்ப்பு வீங்குவோம்.

தற்காலக் கல்வியைப் பற்றிய இயக்கங்கள் ஏற்பட்டு மூன்று நான்கு தலைமுறைகள் ஆயினவே. அம்மூன்று நான்கு தலைமுறைகளாக முன்னிங்குச் சொன்னதெல்லாம் சொல்லிக்கொண்டு வருகின்றோமே. திருத்தங்கள் எவ்வளவோ செய்துவைத்தோமே. ஆரம்பக்கல்வி நடுத்தரக்கல்வி உயர்தரக் கல்விகளின் சம்பந்தமாகச் சட்டங்கள் பல நிறுவவில்லையா! மாறுதல் பல செய்யவில்லையா! முடிவென்ன? தலைமுறையாகவாக அப்பனுக்குப் பிள்ளை தப்பு இங்கிலீஷ் அதிகம். மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் தேவாரமும் திருவாய் மொழியும் வடமொழித் தோத்திரங்களும் சில சொல்லக் கூடியவரா யிருந்தனர். அவர்களது பிள்ளைகள் தேவாரம் திருவாசகம் என்னும் பேரேனும் கேட்டிருப்பர். இரண்டொருவர் தேவாரம் பாடியவர்களின் பேரைக்கூட ஒருவேளை சொல்லிவிடலாம். இக்காலப் பேரன்மார்களைக் கேளுங்கள். நூற்றிற்கு நூறுபேர் தேவாரமென்றால் என்னவென்று எதிர்கேட்பார். சமஸ்கிருத சுலோகமொன்றை உச்சரிக்கச் சொல்லுங்கள். பந்தயக்

குதிரைகளின் குலமுறையும் ஸினிமாவில் நடிப்பவர்களின் பேரும் சொல்லிச்சொல்லித் தடித்த நாக்கும் தடுமாறும். அல்லாது, குணவொழுக்கங்களில் தலைமுறைப் பேதம் எவ்வாறு அமையினும்,"பிள்ளைகள் வரவரக் கெட்டுப் போகின்றனர்" என்றே பற்பலர் கூறுகின்றனர். இது முற்றிலும் அபவாதமாயிருப்பினும் இருக்கலாம்.

கல்வியைப்பற்றிய முயற்சிகள் குறைவின்றி நடைபெறினும் முன்னைக்கு மோசமாய முடிவே கிடைக்கின்ற விபரீதத்தைச் சிறிது தெரிந்துகொண்டால் நலமென நினைக்கின்றோம். முடிவு விபரீதமாயிற்றெனின் அது முயற்சிக்கு முரணாக நேர்ந்ததன்று. முயல்கின்ற முயற்சி யாவும் செய்கின்ற வகைகளை மாற்றி வைப்பனவாகவே அமைகின்றன. செய்கையிற் பிறழ்ந்தோம் என எண்ணியெண்ணி, அட்டையில் வீடுகட்டி விளையாடும் சிறுவர்களைப் போல் விழவிழ வைதுகொண்டே மீண்டும் கல்விக்குக் கோபுரம் கட்டினால் எவ்வளவு உயரும்? எத்தனை நாள் நிற்கும்! அட்டையிற்கட்டிய கோட்டை அடியோடு விழுவது முயற்சிக்கு முரணான சம்பவம் அல்லவே. குறிகொண்ட கொள்கை சரியாயிருக்குமாயின் செய்கை திருந்தும், செய்கையால் திருந்தலாம். ஆனால் செய்கையை யியக்குகின்ற கொள்கைகள் விபரீதமா யிருப்பதால் முடிவும் விபரீதமாவது இயற்கையே.

கல்வித்துறையில் ஊடாடும் கொள்கைகளுள் முக்கியமாய் ஒன்றிரண்டு, உற்று நோக்கினால், பொய்யாக எமக்குத் தோன்றுகின்றன. கல்வியைப் பற்றிய கவனமெல்லாம் சிறுவர் சிறுமியர் மாட்டே செலுத்தவேண்டும் என்பது ஒன்று. கற்பதற்கு உரியஇடம் பாடசாலைகளே என்பது மற்றது. உண்மையோ இவைகளுக்கு நேர் எதிராக இருப்பதைக் காணுதலே இந்நாள் கல்வி யியக்கங்களின்குறை.

பாடம் எதுவாயினும், புத்தகம் எதுவாயினும், போதிக்கின்ற முறைதான் எதுவாயினும் அவைகளால் ஆவதொன்றில்லை. பிள்ளைகள் பயன்பெறுமாறு கற்பது ஆசிரியர்களின் தன்மை யொன்றையே பொருந்தியிருக்கின்றது. இவ்வுண்மையை யாவரும் சொல்லளவில் ஒப்புக்கொள்கின்றனரேனும் அதன் கருத்தைக் காரியத்தில் கையாளக் காண்கிலேம். கற்றுவிட்டவர், அவர் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் நல்லாசிரியர் ஆகமாட்டார். எவனொருவன் எந்நாளும் இடைவிடாது மேன்மேலும் கற்றுக்கொண்டு வருகின்றானோ அவனே மற்றவர்க்கும் கற்பிக்க உரியவன். இந்தப்படி பார்த்தால் உவாத்தியாயர்களா யிருப்பதற்கு உரியவர்கள் எத்தனைபேர் எண்ணலாம்? கற்று நிறுத்தினால் அக்கல்வி கழிந்ததாகி உயிரற்றுப் போகின்றது. உயிரிருப்பதற்கு அடையாளம் வளர்ச்சி. மேன்மேலும் கல்வியை யாவரும் வளர்த்துக்கொண்டு வந்தாலன்றி முன்படித்ததெல்லாம் அழுகிப்போம். அழுகிய குட்டையைக் கலக்கிப் பிள்ளைகளுக்கு உயிர்நீர் வார்க்க இயலுமோ. ஆசிரியர் யாவரும் தம் கல்வியையும் அறிவையும் வளர்த்துவர வேண்டியது இன்றியமையாததாவதுடன், பிள்ளைகள் நன்றாகக் கற்றுக் குணசீலர்களாய் முதிரவேண்டுமே என்னும் ஆர்வமும் அவ்வாசிரியர்களுக்கு மனப்பூர்வமாய் இருக்கவேண்டும். கூலிக்கு இத்தனைபாடம் என்று அளந்துபோடுகின்ற உபாத்தியாயர்களிடத்தில் படிக்கும் பிள்ளைகள் என்ன பயன் அடைவார்கள். கூலிக்குச் செய்கின்ற வேலை எதுவும் மனப்பூர்வமாய் இராது, திண்ணம்

இந்த இரண்டு இலக்ஷணங்களையும் நினைவில் வைத்து ஆரம்பப் பாடசாலைமுதல் உயர்தரக் கலாசாலைகள் ஈறாகச் சோதித்துப் பாருங்கள். ஒருவரிருவர் மருந்திற்கு ஆங்காங்குக் காண்பவரல்லாது பெரும்பான்மை ஆசிரியராயமைவதற்குரியவர் எனத் தகுந்தவரை எதிர்ப்படல் வெகு அருமை. துஷ்டர்களாகவும், தீய ஒழுக்கங்கள் உடையவர்களாகவும், முழு மூடர்களாகவும் இருப்பவர்களுங் கூடச் சிற்சிலர் உபாத்தியாயர்களாய் இருக்கின்றனர். கல்லாது நிற்பாரும் கூலியாட்களும் ஆசிரியரா யிருக்கும் வரையில் கல்விமுறைகளில் எவ்விதச் சீர்திருத்தமும் பயன்படாது. இக்காலப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையும் அடியோடு மூடிவிட்டால் ஒருவேளை மெய்யாய கல்வி பயன்படக் கூடியவகையில் பிள்ளைகள் பெறுவதற் கியலுமென்றே நிச்சயமாக நினைக்கிறோம்.

ஏனெனில், தன் மகன் நன்றாகக் கற்றுப் பயனடைய வேண்டுமே என்னும் ஆர்வம் தந்தையைவிட மனப்பூர்வமாய் வேறு யாருக்கு இருக்கும்? எனினும் பிள்ளைக்கு ஐந்து வயதானவுடன் ஒரு பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் அடைத்துவிட்டதும் தன் கடமை தீர்ந்ததென்று தகப்பன் நினைக்கின்றான். அங்கு ஒருவாத்தியார் கெடுப்பது போதாதென்று வீட்டிலும் ஒரு வாத்தியாருக்குச் சம்பளம் கொடுத்துப்பிள்ளையைக் கெடுத்துக்கொண்டுவந்தால் தன் கடமையைப் பின்னும் நன்றாகச் செய்கின்றதாக அவன் அபிப்பிராயம். கேட்டால், நேரமில்லையென்று கூசாது சொல்வான். உத்தியோகத்தில் போகின்ற நேரம் போகட்டும். கிளப்பிலே போகின்ற நேரமும், வர்த்தமானப் பத்திரிகைகளை குறுக்கும் நெடுக்கும் படிக்கின்ற நேரமும் யார் தின்பாடு. பொதுச் சபைகளில் கழிக்கின்ற நேரத்தில் கால்பாகம் அகப்படவில்லையே தம்மையே தஞ்சமென வளர்கின்ற மக்களுக்கு அன்போடும் ஆர்வத்தோடும் கல்வி கற்பிப்பதற்கு!

ஆனால் ஒன்று. எல்லாத் தந்தைகளும் தம்மக்களுக்குக் கற்பிக்க உரியவரென்று நாம் நினைக்கவில்லை. ஏனெனில் தாமே தினந்தோறும் மேன்மேலும் கற்றுவாராதவர் மக்களுக்குக் கற்பிக்கப் பயன்படார் என்று முன்னரே கூறினோம். இவ்வாறு கற்றுவருபவர் தந்தையர்களில் எத்தனைபேர் நடைமுதலில் இருக்கின்றனர். சர்வகலாசாலைப் பட்டம் ஒன்றைப் பெற்றாரெனின் உத்தியோகம் கிடைத்தவுடன் அதன் காரியம் ஆய்விட்டது. அப்புறம் அறிவுறுத்தும் நூல்களெங்கே, அவர்களெங்கே. ஆர அமர்ந்து நூலாராய்வார் நூற்றிற்கு ஒருவரேனும் இருக்கின்றாரெனக் கூற இயலுமாயின் பின் குறையில்லையே. சென்னை இலக்கியச் சங்கத்தின் (Madras Literary Society) புதிய புதிய நாவல்கள் சில பேர் கைவிட்டகலாமல் செல்லுமிடமெல்லாம் கூடவே வருகின்றதால் அவர்கள் கல்வியைக் கைவிடவில்லை என்று எண்ணவேண்டா. அதுவல்ல கல்வி. அதையேனும் முழுவதும் படிக்கத்தான் படிக்கின்றனரென்று நினைக்கின்றீர்களோ! இக்கால பாவனைகளில் அதுவுமொன்று.

ஆதலால், பெரியவர்கள் மெய்க்கல்வியை மெய்வகையில் படிக்க ஆரம்பித்தாலன்றிப் பிள்ளைகள் ஒருநாளும் நற்கதி அடையப் போவதில்லை. நம் நாட்டின் பிற்காலப் பெருமை இன்றைய சிறுவர்கள் கையிலிருக்கின்றதென்பது பொய். பெரியவர்களே மாணவர்களாகித் தங்கள் பிள்ளைகளின் கல்வியைத் தாமே யேற்றுக் கொள்ளத் தகுந்தவர்களும் மனமுடையவர்களும் ஆகும் வரையில் முயற்சியொன்றும் முன்னேறாது. தொழிற் பயிற்சியே பொதுச்சாலைக் குரியன. மெய்க்கல்வி வளரவேண்டுமாயின், சிறுவர்க்கேற்ற ஆரம்பக் கல்வியன்று கட்டாயப்படுத்தப்பட வேண்டியது. எந்தத் தலைமுறையிலிருந்து பெரியவர்கள் உண்மை மாணவர்களாய் மாறுகின்றனரோ அதனின்றே சிறுவர்க்கு நற்காலமும் நாட்டின் நலமும் ஆரம்பமாகின்றன.



காந்திமதி என்னும்

# காந்தார நாட்டுக் கட்டழகி.

(306-வது பக்கத் தொடர்ச்சி)

## 14. கோனுயழுகை.

இரத்னபுரி பொதுமண்டபத்தில் சந்த்ரசேகரப் பிரபு தலைமை வீற்றிருக்க அவர்பால் அவ்வூரார் நீதிபதி தனமித்ரரை முதன்மையாய்க் கொண்டு அன்று நடந்த கொலையின் கொடுமையும் அதனாலுண்டான வாழ்க்கைப் பயமும் இனி இன்னவகை நிகழாவண்ணமும் சொல்வதும் கேட்பதுமாயிருக்கும் அமயம் கருணாகரரும் கலாநாதனும் அங்குப் போய்ச் சேர்ந்தனர். அவர்களைச் சந்த்ரசேகரர் சினந்து நோக்கி, "உமக்காக யாம் வெகு நேரம் காத்திருந்தோம். காலமிவ்வாறு தாழ்ந்ததேன். மறுமுறை இவ்விதம் நம் நகரவையை யவமதித்து நடக்க இடங்கொடோம், அறிவீர்!" என்று இயம்ப, வந்தவர் இருவரும் பதிலுரைக்கப் புகுங்கால் அவர், "போதும், சமாதானம் ஒன்றும் சொல்லவேண்டாம். இச்சமயம் நாம் கேட்கவில்லை; மறுசமயம் ஏற்கவுமாட்டோம்!" என்று தனக்குள்ள அதிகாரம் தோன்ற விளம்பினர். இன்னவாறு இவர் கடிந்துரைக்க அச்சபையோர் வியப்புற்றனரேனும், அவ்விருவரும் காலங்கடந்த பிழை தமதேயாதலால் பதிலொன்று முரைக்காது தலைதாழ்ந்து நிற்க, நீதிபதி பீடமேறி அக்கூட்டம், தையற்கார தனஞ்சயன் மாயக்கொலையுண்ட விஷயத்தை ஆராய்வதற்குக் கூடியிருக்கின்றதென்றும், குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிக்காவிடின் நகரவாழ்க்கையே அநர்த்தமாய் முடியுமென்றும் ஆவனதெரிந்து அரசற்குரைக்க வேண்டுமென்றும் எடுத்துக் காட்டிப் பின் கருணாகரரையும் கலாநாதனையும் சபைக்கு எதிரில் வருவித்து அவர் அறிந்ததைக் கூறக் கட்டளையிட்டனர். அவ்விருவரும் இவ்விஷயத்திற்குச் சார்பான செய்திகளை உரைத்தபின், சந்த்ரசேகரர், "தனஞ்சயன் பட்ட வெட்டிற்கோ இன்னொருவனே பாத்திரனாதல் வேண்டுமென மதித்தற்கு ஏதேனும் ஆதாரம் உண்டோ?" என்று கலாநாதனைக் கேட்டனர்.

"ஆம், எனக்கென்று தீட்டிய கோடரியே, ஆளயர்ந்து அவனைக் கொன்றதாயிற்று." என்றனன் கலாநாதன்.

"ஆயின், உனக்குற்ற பகைவன்தன்னால் இக்கொலை விளைந்திருக்க வேண்டும்—யாவனவன்?"

"எனக்குற்ற புதுப்பகை நரபாலனென்பது இந்நகர் அறியாததோ—பாவம் தனஞ்சயன் பலியாயினன்."

நகரத் தலைவரும் நீதிபதியும் மற்றுமுள்ளோரும் தம்முட்கலந்து பேசினர். வைத்தியன் தாமோதரனும் அவ்வவையின்கண் இருந்தான். கருணாகரரிடம் வந்து தனஞ்சயன் இறந்ததற்குத் துக்கம் கொண்டாடினன். 'என்ன நீதி, என்ன சட்டம், கொலைபுரிந்த பாதகனைக் கண்டுபிடிக்க ஒரு மார்க்கம் இல்லையே' என்று வருந்துபவர்களுடன் தானும் வருந்தினன். நேரம் சிறிது இவ்விதம் கழிய நீதியம்தலைவர் தனமித்ரர் மீண்டும் முன்வந்து, "இத்திருநகர் உறையும் உத்தமர்காள், அநுமானப்பிரமாணத்தால் இக்கொலைக்குக் காரணம் நரபாலனே யென்பதற்கு ஐயமில்லை, எனினும் காட்சிபூர்வமாய்க் கொலைசெய்யக் கண்டார் எவரும் வாக்குமூலம் கொடுத்திலர். தெய்வ நிந்தனையிலும் மானுடஹத்தியிலும், பெண்பழியிலும் எடுப்பற்ற துஷ்டனாதுங்கும் ஊரும் அந்நரபாலனது மாளிகைக்கு அடியுடன் நெருப்புவைப்பது பாதகமாகாது. எனினும் அது சட்டவிரோதம். ஆதலால் இன்ன செய்வதென்று வகைதெரியாமல் மயங்குகின்றோம். உங்களுக்குள் உணர்த்துதற்கு ஏதேனு முளதேல் 'உணர்த்துமின்,'" என்றனர். அச்சபையின் மந்திரசாஸ்திர நிபுணர் ஒருவர் இருந்தார். நீதிமுறை யறிவிலும் வல்லவர். அவர் எழுந்து முன்வந்து, "அவையீர், கொலைஞன் கரவான். நீதியும் வழுவாது. சாஸ்திர சம்மதமான உபாயம் ஒன்றுளது, சொல்கின்றேன். காட்சிபூர்வமாய்க் காணாததைக் கடவுள் மூலமாய்க் குறிகேட்க நமது கரிமுறையில் ஒரு விதியிருக்கின்றது. அதற்குச் 'சவகரிச்சடங்கு' எனப்பெயர். இது மந்திர முறையாய் நடைபெறுவதேனும் நமது தர்மசாஸ்திரமும் அர்த்தசாஸ்திரமும் இம்முறையை ஆதரிக்கக் காணலாம். இச்சடங்கு ஆற்றுவதும் மந்திரமும் யான் பயின்றுளேன். பிணத்தை நம்மூர்க் காளியம்மையின் கோவிலின்முன் கிடத்துவீராயின் நான் மந்திரிக்கின்றேன். பிறகு யாவர்மீது சந்தேகப்படுகின்றோமோ அவர்களை யெல்லாம் வரவழைத்து அச்சவத்தைத் தீண்டச்சொல்ல வேண்டும். அவன், 'ஹே, மஹிஷாஸுரமர்த்தனி, ஊர்காக்கும் கன்னியே, நீ யறிய நான் இக்கொலை ஏவினதுமில்லை இயற்றினதுமில்லை,' என்று சத்தியம் செய்து தீண்டினனேல் நிரபராதியாயின் எதுவும் நிகழாது. அன்றி, அவன் இஃது இழைத்தனனாயின் அப்பாதகனின் கை படப் புண்ணின்று செந்நீர் பெருகும். பின் என், நமதாசன் விதிக்கும் சிக்ஷைக்கவன் ஆளாகின்றான்," என்றான். தனமித்ரர், ஆயின் நரபாலனையும் அவனாட்களையும் சவம் தீண்ட வைப்போம் வைப்போம். அதற்கான உத்தரவு அரசனே பிறப்பிக்கக் கூடுமாகையால் வாருங்கள் மடத்தின் மாளிகைக்குப் போவோம்," என, நகரத்தலைவர், "இச்சடங்கிற்கு உட்பட மறுப்பனேல்...சவங்காட்டும் சாக்ஷிக்குச் சம்மதிக்காமற் போனால்,செய்முறையாது?" என்று வினவினர். அதுகேட்ட அப்பண்டிதரும் "மறுக்கும் உரிமை யார்க்கும் உளது. ஆயின் அவ்வாறு மறப்பவனை, உயிர் நீத்தோனுக்கு உற்ற நண்பன் எவனேனும் அங்கே அறைகூவிப் போர்க்கழைக்கலாம். அச்சமப்போரில் பிணம்தீண்ட மறுத்தவன் வெல்வனேல் குற்றவாளியல்லன்; தோற்றவனும் அவனுக்கு அடிமையாகி விடுகின்றான். மற்று அவ்விதம் மறுத்தவனே சமப்போரிலும் தோல்வி யடைவானாயின் கொலைக்குற்றமும் அவனையே சார்வதாகும்," என, அங்கிருந்தோர் இச்சடங்கிற்கு உடன்படுவாராயினர். வேந்தன தாணையால் இதை நடத்திவைக்கச் சந்த்ரசேகரர் நேராக மடத்திற்கு ஏகினர்.

விச்வகேசரி மன்னன் நகரத் தலைவர் கூறியது கேட்டான். கேட்டு அநுதாபம் கொண்டவனாய்ப் பாஞ்சாலியையும் நரபாலனையும் தன்முன் அழைத்துவரக் கட்டளையிடச் சந்த்ரசேகரர் போனபின் அரசன் அருகிருந்த விராடபத்ரனைப் பார்த்து, "விராடா, துன்பம் நிலவிய இத்தீச் செயல்களைக் காண். பிரபுக்களுக்கும் பிரஜைகளுக்கும் ஓயா மாறுபாட்டினின்று உய்யும் வகைதான் இலதோ! நம் மமைதிக்கே நரபாலன் களையாயிருக்கின்றான்." என்றனன்.

"அரசே, இப்பழி நரபாலனது தலையுடன் போமாயின் அது நாம் செய்த பாக்கியமாகும்......நரபாலன்

கருணைகாரது மனைப்புறஞ் செய்தது தனக்காக அன்று. மற்று, இத்தனஞ்சயன் கொலையும் அன்னதன் தொடர்ச்சியேயன்றோ ......இவ்வூர் என்ன நினைக்கும் !"

"யார் எது நினைப்பினும், சித்ராங்கன் தூண்டலால் இது நடந்ததாகாதென்பற்கு நம்மனமே சாக்ஷி. நேற்று மாலையிலேயே அவன்தான் நரபாலனை விலக்கிவிட்டனனே."

"ஊர்வாயை யடக்க நம்மனமொன்று போதுமோ... நேற்றிரவு, இறைவா, நின்மகன் மீண்டும் நரபாலனது மாளிகைக்குச் சென்றிருந்தான். ஆம் யானறிவேனது. காகக் கூட்டம்போல் இவ்வூர் மாக்கள் ஏன்தான் தையற்காரன் பிணத்தைச்சுற்றி இப்படிக் கதறுகின்றார்களோ ! சந்த்ரசேகாரும் பிரபுவர்க்கத்தைச் சேர்ந்தவராயிருக்க, அக் கீழ்மக்களுடன் கூடியல்லவோ கத்துகின்றார் !"

"எவ்வுயிராயிருப்பினும் அவ்வுயிர் தன் உற்றார் பெற்றார் பெருநாட்டார்க்கு அருமையன்றோ ?"

"இந்த வாசகத்தை அக்குடிமக்கள் நமக்கே ஓதிப் பின் அத்தனஞ்சயன் உயிர்க்கு ஈடாய் நம் சித்ராங்கனைக் கேட்பர். ஆதலால், ஐய, உயிர்க்குயிர் சமமெனும் விதியை வற்புறுத்தாதீர் !"

"விராடா, நின் நெஞ்சத்து ஏதோ மறைத்துவைத்து மொழி சில கழறுகின்றாய். பதப்பொருளேனும் உட்கருத்தேனும் எனக்கு விளங்கவில்லை. தெளிவுற வகுப்பாயோ ?"

"வேந்தே, நம்மகன் என்னும் அன்பால் என்பொருள் நோக்குகின்றிலை. கட்டமில்லை உரையும், வேண்டுவையாயின் கேள்—காந்திமதியை அபகரிக்கத் துணிந்த சித்ராங்கனைக் கலாநாதன் தடுத்தான்—செத்தது தனஞ்சயனானாலும் கொலை ஏவியவன் ஏவியது கலாநாதனைக் குறித்தேயன்றோ. ஆதலால் சித்ராங்கன்தான் கொலைக்குக் காரணமாவது தர்க்க விரோதமாகாது. கொன்றது நரபாலனாயின் என் ! கொலை ஏவிய வாய் அவனதாயின் என் ! இதற்குக் கர்த்தாதான் காந்தாரநாட்டு இளவரசன்......!

"ஐயா, என் பின்பிறந்தோய், களியன் என்றுரைப்பர் என்மைந்தனைக் காமுகன் என்றுரைப்பர், மற்று நீ கொலைஞனா மாக்குகின்றாய். யானோ பொறேன், பொறேன்......!"

"அண்ணா, இந்நகர் நினைக்கத் தகுந்ததும், இன்று நரபாலன் உரைக்கத் தகுந்ததும் கூறினேன். பின், உயர் குலத்தோன் கீழ்வகுப்பினன் என்னும் வரையறையில்லாச் 'சமத்வம்' என்னும் அபவாதத்தை ஆதரிப்பீராயின் அதன்முடிவு கொடியதுமாகும்!"

"முடிவுதானென்ன!"

"கொற்றவா, சோழ மண்டலத்திலே ஒரு தராதிபன் ஆவின் கன்றைச் செற்ற தன்சிறுவனைத் தேர்நேமி துமித்துக் கொன்றதும் கேட்டதில்லையோ......ஆயின்......"

"ஐய, போதும். நின்கருத்துப்புறமாயிற்று. ஐயோ, என்மகனே, புன்னகை நிலவிய பூங்கண் புதல்வா, நெருநல் மாலையே நீயும் உய்ந்தாய் தெய்வத்திரு அரங்கினில் என்னையும் உய்வித்தாய் என்று ஆறினேன் உள்ளத்தில் வடவைக்கனல் வைத்து நீ பொத்தினாயேடா; உன் சிற்றப்பனும் வாயோயாது அதனை ஊதிஊதி மூட்டுகின்றானடா அப்பா.. ...என் செய்வேன் தெய்வமே !

"அண்ணா, என்னநீ அவசமுற்றது ! மருத்துவனைக் கண்டு கூக்குரலிடும் பிள்ளைமதியோ நினது. முன்நிகழ்ந்தது கூறினேன், மேல் உறுவது கேள்."

"இன்னும் சுடுசரம் என்ன என்ன நின் ஆவத்தில் வைத்திருக்கின்றாய்!"

"ஐய, நோயின் தன்மையைக் காட்டியே சிகிச்சையின் அளவைக் கூறல் வேண்டும். ஆறாப்புண் என்று ஓர்ந்தபின் வைத்தியன் அவ்வவயவத்தையே வெட்டியெறிகின்றான்......சிகிச்சையும் அதன்றி வேறில்லை."

இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் தன் மயிர்க்கால்தோறும் காய்ச்சிய ஊசிகள் பாய்ந்ததெனத் துடித்தான். திகைத்தான். அத்திகைப்பும் கோபமாய் மாறியது. "ஆறாப்புண்ணுற்ற அவயவமா! சிதைத்தெறிதல் ஒன்றே சிகிச்சையா ! என்ன விராடா, இவ்வவலச் சொற்கள் எம் மைந்தன் சித்ராங்கனைக் குறிப்பிடுமாயின்......"

"பெரும, வெகுளேல், பதப்பொருள் கொண்டார் இதைப் பரிக்ஷை செய்வது. சித்ராங்கனைக் குறித்தும் நானிவ்வித அவலமொழிகள் இயம்புவேனோ. அவன் படிந்துள சிற்றின்பத் துறைகளையும் அதற்கு உதவியாயிருக்கும் தீயநட்பினரையுமே நான் புண்ணுற்ற உறுப்பாய் உருவகப் படுத்தினேன். அவை தமைவிலக்கல் அரசே, அமையாதோ !"

"என்ன என்னவோ சொல்கின்றனை விராடா. சொற்களை எடுத்து நீ இந்திரஜாலம் இழைக்கின்றனை. முன்பின் ஒவ்வாதவை மாறுகின்றன. உன் உருவக அணியின் பொருத்தம் உனக்கே வெளிச்சம். இருப்பினும் நின் 'மேல் உறுவது' இன்னும் வரக்காணேன். நரபாலனது பழக்கம் நேற்றே விலக்கியாய்விட்டதால் இனி உறுவது மொன்றுமில்லை."

"மூத்தோய், நரபாலனை விலக்கியது மாத்திரம் போதாது. சித்ராங்கன் இக்கொலைக்குப்பின் ஊரார் கண்ணில் பின்னும் உறுத்துவான். அவன் இரண்டொரு செய்கை இன்னும் இதுபோன்று இயற்றிவிடுவானானால் இப்பூரியர் அவன்தலையையே வாய்விட்டுக் கேட்கத் தலைப்படுவார். ஆதலால் இவையெல்லாம் மறைகின்றவரையில், அவனும் தன்னொழுக்கம் திருந்துகின்றவரையில், இளவரசனைத் தக்க காவலி லிட்டுவைப்பதே உத்தமம் என்று எண்ணுகின்றேன் !"

"என்ன என்ன ! விராடா, என் கண்ணைக் கண்ணின் கருவிழியை விழியுளாடு மணியைக் காவலிலிடுவதா? காந்தாரநாட்டு இறைமகனுக்குக் காவற்கூடம் வளரிடமாவதோ வாய்மை......என்வரினும் வருக, விராடா அது செய்யமாட்டேன். ஊருக்கு அஞ்சிநான் அப்பாலகனைப் பழியேன்.... இரு இரு விராடா, ஐயோ, நீயுமழுகின்றனையோ. என் ஆருயிர்த்தம்பி, அழாதே. நடுநிலை கருதி நீ சொல்வன உனக்கே சகிக்கமுடியவில்லையோ ! அப்பா, அழாதே, நின்மகன் சித்ராங்கனைக் கடவுள் காப்பார். திடமனதுடைய உன்னையே கண்ணீர் வடியச்செய்யும் இந்நிலை நமக்கு எத்தெய்வம் தந்துவைத்ததோ அத்தெய்வமே வழியும் காட்டுமடா என்னப்பா, அழாதே !" என்று அத்தோண்டானை மன்னவன் தேற்றவும் ஆயது.

"என் திருஷ்டி எட்டுகின்றவரையில் வேறு வழியொன்றும் புலன்பட வில்லையே, அண்ணா என்ன செய்வேன் !"

"விராடா, ஏன் வருந்துகின்றாய். தனஞ்சயனது இரத்தப்பழிக்குச் சித்ராங்கன் ஆளல்லன். அவனைச் சவகரிச் சடங்கிற்கு உட்படச் சொல்கின்றேன். அன்னதன் பின்னர் எல்லாரது சந்தேகமும் நிவர்த்தியாகிவிடுமல்லவா ?"

"செய்யலாம்......ஆம்...இல்லை......வேண்டாம்...... அண்ணா, விஷப்பரிக்ஷை கூடாது. நிவர்த்தியாகுமோ அச்சந்தேகம் நிலைபெறுமோ யாரறிவர்? அன்றியுமது மன்னவர் மானத்திற்கும் மரபிற்கு ஏற்குமோதான் !"



"ஆம், ஆம், விராடா, அதுமறந்தேன். விராடா, பல வகைகளில் அதிர்ஷ்டஹீனனான எனக்கு மருளறமுயலும் அறிவும் எம்பால் நிறைதர அமையும் அன்பும் வாய்ந்த நின்னைத் தம்பியாய்த் தந்துவைத்த கடவுளின் அருளோ கரையிலது. அறிவிற்கொருவனும் ஆற்றாத் துன்பத்திற் கொருவனும் எமதன்னை பெற்றனள் போலும்."

"துன்பத்தால், அண்ணா, நாம் வேகடம் செய்த மணி போலாகின்றோம். எனக்குளதாம் இப்புல்லறிவை நீ பரிவினால் பாராட்டுகின்றாய்.....தெய்வமே......!" விராடபத்ரன் இந்தச்சந்தர்ப்பத்தில் தெய்வத்தை அழைத்ததன் காரணத்தைக் கூறி முடிப்பதன்முன், சித்ராங்கன், "என் சிறுதந்தை தெய்வத்தைக் கூப்பிடுவதானால் யார் தலையிலேனும் இடியை வீழ்த்தச் சொல்லத்தான் இருக்கும்......" என்று சொல்லிக் கொண்டே அம்மாடத்துள் புகுந்து, "ஐய, தெய்வத்தை யழைத்தீர், யான் வந்தேன்" என்றனன். அதேசமயத்தில் அவ்வறையின் எதிர்முகமிருந்த கதவு திறந்தது. சந்த்ரசேகரர் முன்னுமாய்க் கலாநாதன் பின்னுமாய் வர, இடுப்பில் ஒரு குழந்தை தாங்கிக் கையிலொரு தளர் நடைப்பாலனைப் பற்றிப் பாஞ்சாலி அழுதகண்ணும் அவிழ்ந்த கூந்தலும் உடையளாய் அரசற்கு அருகுவந்தனள். வந்தவர் வேந்தனது அடிபணிந்து மற்றுளோரையும் வணங்கி நிற்கச் சித்ராங்கன் "முன்னிரவு மாண்ட நீ மீண்டுவந்த தெங்ஙனம் ?" என்று வினவுவான்போல் கலாநாதனை நோக்கினன். பார்வையின் பொருளறியாத கம்மியன், 'பாண்மகன் யாது ஆயினன்' என்று தன்னைக் கண்ணால் கேட்கின்றனனென உன்னி,'அவளுக்கொரு பயமில்லை' என்பான்போல் நோக்கினன். அரசன் பாஞ்சாலியை விளித்து, "புன்விதிமாதே, என்பால் யாது வேண்டுகின்றனை ?" எனப் பரிவுடன் கேட்டான். அவள் சொல்லொன்றும் இயம்ப ஆற்றாளாய் நகரத் தலைவரைப் பார்த்தான். அவரும், "மன்னர் பெரும, இம்மாதும் இந்த அநாதைப் பாலகரும் தமது போஷகன் காலஞ்சென்ற தனஞ்சயனை நரபாலன் கொன்றதாகக் குற்றம் சாற்றி நியாயம் வேண்டித் தேவரீரை இறைஞ்சுகின்றனர்," என்று தெரிவித்தனர். அதைக் கேட்ட அரசன், "பெண்ணே, ஏன் இவ்வழக்குத் தொடுக்கின்றாய். நீ உற்றிருக்கும் துயரமே உன்னை மற்றவர்களிடம் இரக்கம் காட்டத் தூண்டவேண்டுமே. உனது புருஷன் நாமெல்லாம் ஒருநாள் சேரவேண்டிய இடந்தானே சேர்ந்திருக்கின்றான்," எனப் பாஞ்சாலிக்குக் கூற, அவள், "குடியோம்பும் கொற்றவா..... இடம் ஒன்றாயினும் வழிவேறாயிற்றே. என் நாதன், ஒரு பாவமுமறியா உத்தமன், தனது இரத்தத்திலேயே நீந்தியோ எமலோகக் கரையேற வேண்டும் !" என்று எடுத்துக் காட்டினாள்.

"உண்மையே, பெண்ணே, நீ கூறுவதுஉண்மையே. அவரவர்விதி என்றெண்ணி யான் குடிகளைக் காவாதொழிதல் அரச முறையன்று. அம்மே, நின் கணவனை இழந்தாய் எனினும் நினக்கு வேறெந்த வறுமையுமின்றி யான் செய்துவைக்கின்றேன். ஆனால் இப்பழியை நீ பின்னும் தொடர்வது ஒழியவேண்டும். இவ்வழக்கைத் தவிர்ப்பாய். உயிர்க்கு உயிர் வாங்கி யேதுபயன். ஈதுனக்குப் பொருந்துமாயின் நானே இனி யுன்னையும் உன் மக்களையும் போஷிப்பேன். உன் கருத்தென்ன ? இரக்கம் காட்டி நீ செல்வம் பெருக வாழ விழைகின்றனையோ, அல்லது பழிக்குப்பழி தேடி எழ்மைக்கே இசைகின்றனையோ, இயம்பு," என்றனன் மன்னவன். இதற்குப் பதிலுரைக்கப் பாஞ்சாலி இமையளவு தாழ்ந்திலள். "அடியேங்கள் ஏழையென்பது, வேந்தே நிச்சயம். எனினும் பாவியேன் வனமேமேவி விலங்குகளுடன் உண்பினும் உண்பேன். இப்பாலர்க்குப் புல்தான்போட்டு வளர்ப்பினும் வளர்ப்பேன்.. மன்னவா, என்னினிய நாயகன்தன் உயிரையே விற்றுப் பிழைக்கும் வழி போதிக்கின்றாய்......நன்று, நன்று வாழ்க்கை நன்று !" எனப் புலம்பலுற்றனள்.

"இது இப்படித்தானாகும். இந்தக் காந்தாரநாட்டிற்றான் எங்கும் போர் சோரி பழி அல்லது பழகியிலரே. குதலைவாய்க் குழவி பயிலும் மொழிகள் அவை! சிற்றிடை மெல்லியல் மாதர் புலம்பிடும் சொல்லும் அவை ! நரைத்தலை மூப்பனும் நவில்வது இவையே ! நல்லது, நரபாலனை அழைப்பீர்."

நரபாலன் வந்தான். பட்டு அங்கியணிந்து ஒடிந்த கை தெரியாவண்ணம் பொன்தானை போர்த்தித் தந்தப்பிடி இட்ட பிரம்பொன்றில் ஊன்றிவந்த அவன் அரசனைத் தொழுது ஆசனத்தமர்ந்தபின், "ஐய, இந்நங்கை தனஞ்சயனைக் கொன்ற குற்றம் நினதென்பாள். எதிருரை உளதோ ?" என்று வினவினன் விச்வகேசரி.

"அன்னதற்குச் சாக்ஷியேது ?"

"அனுமானமே !"

"அனுமானத்தால் கொலைக்குற்றம் கற்பித்தலாகுமோ, கோன்முறையறிந்த கொற்றவா, யானிக்கொலை செய்திலன்."

"ஆயின் சவகரிச் சடங்கிற் குட்படுவாய்." என அரசன் அச்சடங்கு இயற்றும் முறையை நரபாலனுக்கு விளக்கிச்சொல்ல அவன், "இச்சோதனைக்கு யான் உடன்படேன். என்னுயிர் கவரவெண்ணி இஃது யாரிழைக்கும் மாயமோ, என்ன வஞ்சனையோ, தந்தரமோ யானறியேன். இக்கொலையால் எனக்கு எது இலாபம். எந்த வொருவேளையில் இந்தக்கொலை நடைபெற்றதாகக் கொள்ளல்வேண்டுமோ அதேவேளையில் நானென்மாடத்தில் அமளியில் நோயால் மிகவருந்தியிருந்தேன் என்பதை இதோ இவ்விளவரசரைக் கொண்டே ரூபிக்கக் கூடியவனா யிருக்கின்றேன். ஆதலால் நீதித்தலைவர் நகரத்தலைவர்போன்ற பெருமக்கள் என் நாசம் கருதி யிப்பொய்க்குற்றம் சூழ்ந்து இப்பெண்ணைத் தம் கைக்கருவியாக்கி இத்தூறு அரசே நின் செவியுட் செருகியுளர்," என்று செருக்கிக் கூறிச் சித்ராங்கன் முகத்தை 'என் சார்பு நிற்றியோ' என மருட்டுவான்போல் உற்று நோக்கினன்.

சித்ராங்கனும் எந்நாளு மகலாத் தன் புன்னகையுடன் எழுந்திருந்து, "எந்தாய், கொலைநடந்த காலத்தில் நான் நரபாலனுடன் நமது அரசமுறையைப்பற்றிச் சில விஷயங்களின் குணாகுணங்களை ஆராய்ந்திருந்தது உண்மையே அவர் நோயால் வருந்திச் சக்தியற்றவராய்த் தான் இருந்தார். ஆகையால் இக்கொலையை அவர்... நேராகச்...செய்திருக்க முடியாது......ஆனால் ஆட்களை ஏவிக் கொல்வித்திருக்கலாமோ கூடாதோ என்பதைப் பற்றி யான் ஒன்றும் சொல்வதற்கில்லை...அந்த விஷயமாய் அவர் என்னைச் சாக்ஷி கோரவுமில்லை....அவரது ஆட்களுள் சிலர் இக்கொலைக் குற்றவாளிகளல்லர் என்பதற்கு என்சொல் பணயமாக ஒவ்வேன்." என்று முடித்தனன். சித்ராங்கன் பேச ஆரம்பித்தபோது கிளர்ந்த நரபாலனது முகம் நடுவில் வாட்டமடைந்து முடிவில் சினத்தால் சிவந்தது. விச்வகேசரி, "நல்லது, நரபாலா, எம்மகன் பகர்ந்தமொழி நின்னைக் குற்றத்தினின்றும் விடுவிக்கின்றது. எனினும் நின்னையடுத்துள ஆட்களை இச்சவகரிச் சடங்கில் சோதிக்கக் கருதுகின்றோம். ஆகையால், அவர்களை......" என்று சொல்ல

வரும்போது, "என்னை யடுத்துளோரும் இதை இழைத்திலர் என்பதற்கு என் கூற்றே ஆதாரமாகும்," என நரபாலன் தடுத்தனன்.

"நரபாலா, நின் கூற்று எம்மால் ஆதரித்தற்கொத்த வாய்மை இலது. இம்மாலைப்போது நின்னாட்களை வரையும் காளிகோவிலுக்கு அனுப்பி நிறுத்துவாய். இஃது எமதாணை. யாரையேனும் ஒளிப்பாயேல், எமக்கது அறியும் திறமுண்டாகையால், இக்கொலைக் குற்றத்திற்கு நீயே பாத்திரனாவாய்!" என நரபாலனை அச்சுறுத்தி விடுத்தனன். போகுமவன் இறைமகற்கெதிர் நின்று பிறரெவரும் கேளாவண்ணம், "இளவரசே, என்னை நீ யிவ்வாறு காட்டித் தந்தது போதுமோதான்" எனக் கறுவி நோக்கினான்.

"நரபாலா, விழிகொண்டு அச்சுறுத்தேல். மறுபிறப்பில் நீ திட்டிவிடம் ஆகிப் பிறக்கலாம். இப்பிறப்பில் விழிப்பதெல்லாம் பயனில்லை. மற்று, என்ன, நரபாலா. நின்பொருட்டு என் நா பொய்வளர்க்கப் புகுமோ. என் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் உனக்காக எவ்வளவு தூரம் பேசலாமோ அவ்வளவும் பேசியதற்கு நீ நன்றியுடையவன் ஆதல் வேண்டும். கொலை செய்தவனை நேற்றிரவு நீயே கூப்பிட்டு எனக்குக் காட்டியிருக்க அதை நான் மன்னற்கெதிரில் அடியுடன் மறைப்பதெங்ஙனமையும். நாணித்துடன் நிறுத்தியதே பெருந்தன்மை என்று மதி, நரபாலா!"

கையைப்போன்றே மனமும் இற்ற தன்மையனாய் நரபாலன் அகன்றனன். இளவரசன் தன்பின் நகைத்து நிற்கின்றான் என்னுமோர் உணர்ச்சி யவனுக்குண்டானதும் பொய்யல்ல.

அரசன் தன் சேனாதிபதி தேவதாரனை அழைத்து அன்று மாலை காளிகோவிலில் சவகரிச் சடங்கு நடைபெறுதற்கு ஆவனவற்றை மந்திரசாஸ்திர பண்டிதர் சொல்லும் வண்ணம் ஆக்கிவைக்க விதித்து அனுப்பினன்.

மடத்தை விட்டகன்ற நரபாலன் தனது மாளிகைக்கு வந்துசேர அங்கு இவன் வரவை எதிர்பார்த்து வைத்தியன் தாமோதரன் காத்திருக்கக் கண்டான். அவன் எழுந்து வந்தவனைத் தாழ வணங்கிக் 'கைப்புண்ணும் மனநோயும் இருந்தவாறு என்' என விநயமாய் வினவினன். நரபாலனோ போர்த்திய போர்வையை அகற்றி அவ்வைத்தியன் முகத்தின்மீது சினத்தொடு மெறிந்து, "அட, தாமோதரா, நானே வளர்த்த அச்சித்ராங்கன் என் மார்பிலேயே பாய்ந்தானடா. நான் வைத்திருந்த ஆசையெல்லாம் மதியாது என்னைக் கைதுறந்து விட்டானடா. அரசன்முன் வாய்திறந்து ஒருவார்த்தை என் சார்பிலவன்சொல்லியிருப்பானாயின் இவ்வழக்கனைத்தும் தீர்ந்துபோ யிருக்கும். அந்த வச்சையன் இவ்வொரு சொல்சொல்ல நா நல்கூர்ந்தனனன்றே! நீலியொருத்தி தொடுத்த வழக்கிற்கு என்னை இலக்காக்கிச் சிரித்தானடா அச்சிறான்," எனக் கழறினான். முன்னிரவு தானிழைத்த தவறிற்கு எவ்விதம் வைதுயாது செய்வனோ நரபாலன் என்று பயந்திருந்த தாமோதரன், அதையவன் மறந்து சித்ராங்கன்பால் தன் சீற்றத்தைப் பாய்ச்சக் கண்டு மனம் தேறியவனாய்ப் "பிரபூ, 'சிரித்தார்க்கு ஒருநாளை யின்பம் ஒறுத்தாற் குலகுள்ளளவும் புகழ்' எனும் வள்ளுவர் வாக்கு வேதமன்றே!...முதலில் இம்மருந்தைத் தடவிக் கொள்வீர்," என்று தன் பையினின்று மருந்துக் குப்பியை எடுத்தான்.

"என் புண்ணைப் பொறுத்து ஆற்றலாம், வைத்தியா, இப்பழியகற்றிப் பகைமுடிக்கும் வழியை முதலில் சொல்வாய்."

"நேற்றிரவு ஒருமுறை ஆராய்ந்து முடிவிற்கு வந்ததை மீண்டும் கேட்பானேன்?"

"...தாமோதரா, கொலைபுரிந்தவன் தீண்டலால் பிணத்தின்புண் வாய்திறந்து குருதி கக்குவதும் இயல்போ?"

"அப்படித்தான் சாஸ்திரம்......நான் நேராகக்கண்டதில்லை. ஆயினும், பிரபூ, தீண்டுதற்கு ஒவ்வாதவன் தனிப்போர்க் கழைக்கும் உரிமையுளன் என்பதும் விதி."

"ஆம், அரசன் அது கூறினான், அதனாலென்?"

"இம்மகோதரன் சவத்தைத் தீண்டலாகாது. சமப்போர்க்கே அழைக்கட்டும். எப்படியும் வென்றிடுவன். எஃகினது உரத்தை ஏந்திய தோளனாயிற்றே அவன்!"

"ஆம், எஃகென்றால், காய்ச்சி மடக்கத்தான் அத்திறத்தில் கம்மியன் இருக்கின்றானே! மகோதரன் விளிவதால் எனக்கேதும் வருத்தமில்லை."

"ஆனால், பிரபு, சாவதன்முன் இரகசியத்தை யெல்லாம் அவன் பிதற்றி விடுவனென்னும் அச்சம் நுமக்கில்லையே?"

"தாமோதரா, நமன்வந் திழுக்கும்போது அப்பேய் எப்படி ஆடுமோ! இதற்கென்செய்வது?"

"விஷயங்களைச் சற்று நிதானமாய் ஆராய்வோம். ஒன்று, தமதாட்களின்பிறரைப்போலவேமகோதரனையும் சவந்தொட்டுச் சோதிக்கவிட்டு விடலாம். கொலைசெய்தவன் அவனேயானாலும் குறியொன்றும் விளையாததும் கூடும். இச்சடங்கெல்லாம் பயமே உறுத்தும் பொய்யோ என்னவோ. இரண்டாவது, சடங்கை மறுத்தவன் சமப்போர்க்குக் கூப்பிடலாம். அந்தப்பக்கம் அவ்வமங்கலிக்காகப் போர் ஏற்பவன் கலாநாதன் என்பதிற் சந்தேகமில்லை. அப்போரில் இவன் அவனைக்கொன்றாலும் அவனிவனைக் கொன்றாலும் நமக்கு என்னநஷ்டம். மூன்றாவது, கலாநாதன் இவனைக்கொல்லாது வென்றிடலும் கூடும். அவ்வாறாயின் அரசன் இவனைப் பின் தூக்கிலிட்டுத் தொலைத்துவிடுவன். தோற்றதற்கும் தூக்குமரத்தில் தொங்குவதற்கும் இடையில்தான் அவன் நாவாட இடமுண்டு. அன்னபோது அவனே நம்மைக்காட்டிக் கொடுத்துவிடலாம். அல்லது 'உண்மையைச் சொல்லி யுன்னை யிக்கொலைக்கு ஏவியவரைத் தெரிவிப்பாயாயின் உன்னைவிட்டு விடுகின்றோம்', என அரசன் தூண்டினால் தவறாது இவன் நம்பேரைச் சொல்லியே தீர்வான்".

"ஆகையால் அந்தப்போது அவன் வாயடைத்திருக்கும் வழி தேடவேண்டு மல்லவா?"

"ஆம், உரைப்பது கேட்பீர். இந்நகர்க் கொலையாளியை யானறிவேன். வைத்தியக் கல்வியில் நான் உடல் வகையைச்சோதித்தறிய அவனெனக்குத்தூக்கிய பிணந்தனைப் பலதரம் கொடுப்பன். யானுமவனுக்குப் பொருள் தருவேன். ஆதலால் அவன்தன் உதவியால் இம்மகோதரனைச் சாகாமல் தூக்கிலிடும் விதம் செய்துவைக்கக் கூடும். இதைச் சொல்வீர் மகோதரனுக்குச்சொல்லி, அவன் சும்மா இருப்பானானால் உயிரைப் பெறுவன் என்று எடுத்துக் காட்டுவீர். இது கருதி எமதுபேரை அம்பலத்திற்கு இழுக்காமலிருக்கலாம்."

"நனி செப்பினாய் வைத்திய. அவ்வாறே யவனுக்கு ஓதிவைக்கின்றேன். மகோதரன் உயிர் பிழைத்தலால் எனக்குப் பின்னும் பயன்படுவான்.........இரு, இரு, தாமோதரா, இன்னொன்று செய்தாலென்ன! சும்மா இருப்பதைவிட இக்கொலைப்பழியை அவன் சித்ராங்னது தலையிலேயே சுமத்திவிடும்படி கற்பித்தாலோ. யாமும் தப்புவோம், நம்பகைவனும் சிக்குவானன்றோ!"

"பிரபூ, நரபாலரே, நும் நுண்ணறிவை வியந்தேன். காளிகோவிலிற் கேகும் காலமும் குறுகியதால் ஐய, மகோதரனுக்கு அவன் பாடத்தைப் பிறழாவகை ஓதிவைப்பீர். அச்சமயம் யானவனருகிருப்பேன். ஓதிய பாடம் மறந்து அவன் பிதற்றப் புகுவானேல், என் வைத்திய விரல்பட வாயடைத்துச் சாய்வன். பின் நம்மிருவர் இரகசியம் நம்முடனேயே!"

இதன்பின் இருவரும் பிரிந்தனர்.

T. N. சேஷாசலம்.



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி

[308-ம் பக்கத் தொடர்ச்சி]

### அன்பே இன்பம்

**உலகம் துன்பம்:**—உலகத்தைச் சுற்றி முற்றிலும் உற்றுப்பார்த்தால் என்ன காண்கின்றோம். "பிறந்தோருறுவது பெருகிய துன்பம்" என்கின்றார் சீத்தலைச் சாத்தனார். பிறந்ததுமுதல் இறப்பது வரையும் துன்பம் நம்மைவிட்டுப் பிரிந்துபோவதில்லை. உடலை எல்லாம் முறுக்கிவளைத்துக் கையிலும் காலிலும் விலங்குபூட்டிக் குண்டுகட்டாய்க்கட்டி இருட்குகையில் எறியப்பட்டாற்போலத் தாய்வயிற்றிலே கட்டுண்டு சிறைப்பட்டுத் தாயின் வயிற்றுத் தீயிலே வெந்து புழுங்குகிறோம். பின்னர், நெருக்குண்டு வெளித் தள்ளப்பட்டபோது படும் பாடுதான் என்னே! என்னே! உள்ளிருந்த சூட்டிற்கும் வெளியிலிருக்கும் குளிருக்கும் எவ்வளவு வேற்றுமை இருக்கின்றது. இந்தக் குளிரில் வாடி வதங்கிப் பின்னர்ச் சிறிதுசிறிதாகப் பழகி வளர்கையில் ஏதொன்றும் செய்ய இயலாது மண்ணாங்கட்டிபோல விழுந்துகிடந்து எடுப்பார் கைப் பிள்ளையாகப் பிறர் அருளாலே உலகில் வாழ்ந்து வருகின்றோம். அறிவு வளரவளரக் கண்ட கண்ட பொருள்களின்மேலெல்லாம் எண்ணம் ஓடுகின்றது. அது வேண்டும் இதுவேண்டும் என்று அழுது புலம்புகிறோம் பின்னர்ப் பள்ளிக்கூடத்துக்குப் போய் "வாத்தியார் சாவாரா என் வயிற்றெரிச்சல் தீராதா" என்று குந்திக் குந்தி அழுகின்றோம். காதலால் கரைந்துருகிக் கனவிலுங்கூட உடலும் உள்ளமும் உயிரும் ஒருங்கே வெம்பிவெதும்பித் துடிதுடித்துப் புழுங்குகின்றோம் மக்களைப் பெற்று,வளர்ப்பதோ மலையைச் சுமந்து திரிவதாய் முடிகின்றது. பாழும் இவ்வயிற்றை வளர்க்க வேண்டிப் பலரிடமுஞ் சென்று பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பத்துப்பணம் பெறுவதும் பட்டினி கிடப்பதும் சொல்லத் தரமல்ல. ஊர் வம்பளந்து உற்றாரோடும் உறவினரோடும் ஒன்றாகக் கலந்து வாழும் உலகவாழ்க்கையில் வரும்படியான மனக்கசப்பே முடிவில் கொடிய நஞ்சாய் நம்மைக் கொல்லவும் செய்கின்றது. நோய்களுக்குப் பெருந் தாயகமாகிய நமது உடலமானது நாம் சென்றசென்ற இடத்திற்கெல்லாம் கூடக்கூட வந்து நம்மை வாட்டுவதையும் சுடுகாட்டிற் கோட்டுவதையும் சொல்லவும் வேண்டுமோ?

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை
உலகத்தினர் அந்தோ என் செய்வர்.
உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந்தெண்ணுவன-கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

இனி, இறப்பதனை எண்ணி என்ன சொல்லுவோம்? சிவனேயாய திருவாதவூரரே "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்." என்று புலம்புவாரானால் ஒன்றுமறியா யாம் என்ன பாடுபடுவோம். இதனாலன்றோ திருவள்ளுவனாரும் "சாதலின் இன்னாதது இல்லை" என்பா ராயினார்.

**இன்ப நாட்டம்:**—உலகம் துன்பமே ஓர் உருவானது. எனவே எல்லோரும் இன்பத்தையே நாடவேண்டியதாயிற்று.

"இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே"

என்றார் பக்குடுக்கை நன்கணியார். அப்போது பிறந்த குழவியும் சுவைக்க இனிக்கும் தாய்ப்பாலுண்டு தன்னை மறந்து விடுகின்றது. தலையானது வெளியில் வந்திருக்க உடலானது உள்ளே அகப்பட்டு நெருக்குண்டு பிறந்ததும் பிறவாததுமாய்க் கிடக்கும் அச்சிறு குழவிகூட யாரேனும் அதன்வாயில் விரலையிட்டால் அதனைச் சுவைத்துக் கொண்டே தான் படும் அல்லலை மறக்கின்றதென மருத்துவர் கூறுகின்றனர். சிறுவர்தானா? பெரியோரும் அப்படித்தான். நமது தொழில்கள் எல்லாம் இன்பத்தை நாடித் தோன்றுவனவே. எல்லோரும் அறிந்த பழங்கதை யொன்று இப்போது எமது நினைவிற்கு வருகின்றது. ஒரு குடியானவன் தன் வீட்டினில் தாய் தந்தையரை விட்டுவிட்டுத் தன் மனைவிமக்களை அழைத்துவா மாமியார் வீட்டிற்குப் புறப்பட்டுப் போயினான். இடையில் வழிதப்பிப் போகவே இருண்டதொரு பெருங்காட்டில் சிக்கிக்கொண்டான். அடர்ந்த அக்காட்டில் ஆனை ஒன்று அவனைத் துரத்திவந்தது. அவனோதன் உயிரை இரண்டு கையிலும் சேரப் பிடித்துக்கொண்டு ஓடோடியும் போயினான். அச்சத்தால் தன்னை மறந்து, தரையோடு தரையாய் இருந்த பாழ்ங்கிணற்றில் காலிடறி விழுந்தான். பக்கத்திலிருந்த பழையதோர் ஆலமரத்தின் வேரானது அவ்வாறு விழுந்தவன் கைக்குத் தட்டுப்பட்டது. அதனைப் பிடித்து ஊசலாடிக்கொண்டிருக்கையில் ஓர் எலி அந்த வேரையும் கல்லத் தொடங்கியது. கிணற்றுக்குள் குதிப்பது என்றாலோ கீழே ஒரு மலைப் பாம்பு வாயைத்திறந்து வைத்துக்கொண்டு அவனைப்பிடித்து விழுங்க எட்டிப்பார்த்து எக்களக்கி நின்றது. ஊரைவிட்டான். வாயிலைவிட்டான். தாயும்தந்தையும் ஓர் ஊரில் இருந்தனர்; மனைவி மக்கள் மற்றோர் ஊரில் இருந்தனர். இடையே இவன் இடர்ப்படுகின்றான். இவர்கள் எல்லோரையும் பிரிந்து இன்னோரை நினைந்து மனம் இங்கும் அங்கும் ஊசலாடத் தனிவழியில் தன்னந் தனியே தயங்கி நின்றான். மேலோ காட்டுயானை; கீழோ மலைப் பாம்பு. இடையே இடிசுவரில் எலிகல்லுகின்ற சிறிய வேரில் இவன் உயிர் ஊசலாடுகின்றது. ஐயோ என்று அலறி அண்ணாந்து பார்த்தான். அவ்வாலமரத்தின் உச்சியிற் கட்டியிருந்த தேன் கூட்டினின்று தேன் சொட்டிற்று. தேனீ ஒன்றும் நாக்கில் வீழ்ந்து வெடுக்கெனக் கொட்டிற்று. கொட்டுவதையும் பாராது அந்தச் சிறிய தேன் துளியினைச் சுவைத்துச் சுவைத்து உண்டானாம். உயிரிழக்கும் அந்நிலையிலும் ஒருதுளித் தேனில் உலகை மறப்பானானால் இவன் உள்ளத்தில் இன்பப்பற்று எவ்வளவு உறைந்து தடிப்பேறிப்போய் இருத்தல் வேண்டும். மக்களைப்பற்றிப் பேசுவானேன்? விட்டில்களும் விலங்குகளும் மீன்களும் பேன்களும் கூட வல்லவா இன்பமே நாட்டமாய் இருக்கின்றன. விட்டில்கள் பழமென மயங்கி விளக்கில் விழுந்து பொசுங்குவதும், தீனிக்கலைந்து சிறிய புழுக்களுக்காக வாயை ஆவெனப் பிளந்துகொண்டு, பின்னர்த் தூண்டில் முன்மாட்டிக் கொள்ள மீன்கள் தொண்டை விக்கிச் சாவதும் சிறிதளவு இன்பத்தை நாடியல்லவா! இன்பம் துய்க்க வேண்டி அவைகள் யான் முந்தி நீ முந்தி என்று ஓடோடியும் வருகின்ற பரபரப்பு என்னே, என்னே!

மயிரிழையினும் நுண்ணிதாகிய புழுக்களும் ஒன்றையொன்றுண்டு உயிர்பிழைத்து இன்பமுறுகின்றன புல்பூண்டுகளும் மரங் கொடிகளும், நஞ்சுபாய மனம் பதைபதைத்துச் சோர்வடைந்து சுருண்டு வீழ்வதனையும், நல்லன உள்ளே ஊறியதும் உவகை பூத்து நகைப்பன போலத் தளிர்த்துத் தழைப்பதனையும் ஜகதீச சந்திர போஸ் என்பார் எடுத்து விளக்கவில்லையா? உயிரில்லாதனகூட வருந்திஉழைக்க ஒருப்படுவதில்லை எனலாம். நீர் பள்ளத்தில் பாய்கின்றதா? மேடேறி ஓடுகின்றதா? கல்லை எதிரே கண்டால் வருத்தமின்றி அப்புறம் ஒதுங்கிச் செல்கின்றதா? அதனை முட்டித்தாக்கி உடைத்தெறிந்து ஊடுருவிச் செல்கின்றதா? பல பல பாரிப்பானேன். துன்ப நீக்கமும் இன்ப சூக்கமுமே எல்லாப் பொருள்களும் எல்லா வுயிர்களும் எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும் வேண்டுகின்றன.

**இன்பவழி:**— இனி, இவ்வின்பத்தை எங்ஙனம் அடைவதென்பதே எல்லா அறிஞர்களும் உலகம் தோன்றிய அந்நாள் தொடங்கி இந்நாள் வரையும் ஆராய்ந்து நிற்பது. ஆறிலும் சாவு நூறிலுஞ் சாவு. என் துன்பத்தில் அழுந்திப் புழுங்கவேண்டும். பலநாள் துன்பம் ஒரு நாளில் ஒழிவதனால் இன்றே பட்டினி கிடந்து இறந்து விடுவதே இன்பவழி என்றனர் சிலர். இறந்தாலேனும் இன்பம் பெறலாம் என்பது என்ன உறுதி? துன்பம் உலக இயல்பானால் உலகில் உள்ள துன்பம் பெருகாதபடி இருப்பதற்காகப் பிறர்க்கு நம் வாயிலாக அணுவளவும் துன்பம் தோன்றாதபடி காத்து நம்மாலியன்ற உதவியும் செய்து நாம் இன்பத்தைப் பரப்புவோம் என்றனர் இன்னும் சிலர். நம்மாலாவதென்ன? "நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கின்றது" என்றனர் பலர். இவற்றை எல்லாம் முற்ற முடிய எழுதிப்போக இதுவல்ல இடம். பலரும் பலவற்றை இன்பவழியாகக் கூறுவதை மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் விரித்துரைத்து அவற்றின் வேறாய அன்பு வழியைக் காட்டி யருளிய சேக்கிழார் பெருமானைப் புகழ்கின்றார்,

> நீடும்இன்பு அரிவையர் புணர்ப்பு என்மரும்; ஐந்து
> நிகழ்கந்தமும் கெடுதலே
> நிலவும்இன்பு என்மரும்; குணம் மூன்றும் ஒழிதலே
> நிரம்பலுறும் இன்பு என்மரும்;
> நாடும்இன்பு இருவினைக் கேடு என்மரும்; மலம்
> நசித்தலே இன்பு என்மரும்;
> நவில் விக்கிரகம் நித்தம்இன்பு என்மரும்; தோன்றும்
> ஞானமே இன்பு என்மரும்;
> பாடும்இன்பு உயிர்கெடுதல் என்மரும்; பகுதிமேல்
> கெடுதலே இன்பு என்மரும்;
> பாடுசித்தி யின்பு என்மரும்; பிறரும் வாதம்
> படர்ந்து வருதிறன் அற,வளங்
> கூடுசெந்தமிழ் அருமை அறிபெருஞ் சேவையார்
> குலசிகாமணி வருகவே;
> கொன்றைச் சடாடவியா மன்றைப்
> பராவிஎழு குன்றைப் பிரான் வருகவே.

**அவாவே துன்பம்:**—இவ்வாறு முரண்பட்டு முட்டிக்கொள்வோர் அனைவரும் முதல் முதலாகத் துன்பத்திற்குத் தொடக்கம் எங்கே என்றுதான் ஆராய்கின்றனர். அவா என்பதே "தவா அப்பிறப்பீனும் வித்து" என்பதனையும் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். நம் வாழ்க்கைதான் என்ன? பல தொழில்களேயாகும் தொழிலின் தோற்றுவாய் என்ன? அறிவம்மை (ஞானசக்தி)யின் அருளால் உலகத்துப்பொருள் ஒவ்வொன்றையும் அறிந்து, விருப்பம்மை (இச்சாசக்தி) பரப்பிவைத்த வலையில் சிக்கிக்கொண்டு, தொழிலம்மை (க்ரியா சக்தி)யின் அடியாராய்த் தொழில் பல செய்து துன்புறுகின்றோம். இதுவே தொழிலின் வான்முறை. இது வேண்டும் அதுவேண்டும் என்று அலைந்து திரிந்தே துன்பத்தில் ஆழ்கின்றோம்.

**விடாயும் அவாவும்:**—மக்களாய்ப் பிறந்தமையால் அறிவு வளரப் பெற்றோம். ஆனால் அதற்கேற்பத் துன்பத்திலும் ஆழப்பெற்றோம். விலங்குகளுக்குப் பசி எடுத்தால் தீனி தின்னும் வேட்கையும் நெஞ்சுலர்ந்தால் நீர் பருகும் வேட்கையும் எழுகின்றன. கண்டதை உண்டு தணித்துக் கொண்டு, அன்றைய பொழுதைக் கழிக்கின்றன. அனைத்தையும் அன்றே மறந்து விடுகின்றன. கழிந்த தன் நினைவும் வருவதன் எண்ணமும் அவற்றிற்கு அணுவளவும் இல்லை. நாளைக்கு வேண்டுமே என்று "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்" வழக்கம் அவற்றினிடத்தில் இல்லை. நேற்றுண்ட மாங்கனி இனித்து இருந்ததால் இன்றும் வேண்டுமென்று அதே ஏக்கமாய்த் திரிந்து பின், அது வேண்டி ஊக்கமாய் உழைத்தலும் அவற்றின் வாழ்க்கை யல்ல. விடாய் ஒன்றே அவற்றிற்கு உண்டு. உணவு, நீர், காற்று முதலிய இன்றியமையாத பொருள்களின் மேற் செல்லும் பற்றுள்ளத்தினை விடாய் என்று பெயரிட்டு இங்கு வழங்குவோமாக. இன்றியமையாத அப்பொருள்கள் அகப்படா விட்டால் இறந்துபட வேண்டுவதுதான். அகப்பட்டால் ஆறுதல் அடைகின்றன. ஆனால் மக்களுக்கோ விடாய் என்ப தொன்றேயன்றிக் கண்டகண்ட பொருள்கள்மேல் எல்லாம் செல்லும் பற்றுள்ளமும் உளதாகின்றது. இன்றியமையாதன என்று எவ்வகையாலும் சொல்லத் தகாதன எல்லாம் இன்றியமையாதனவாக இவர்கள் கண்ணிற்குப் புலனாகின்றன. அவைகளைப்பற்றிய எண்ணங்களும் விடாயாய் முடிகின்றன. விடாயாய் இவர்கள் தலையில் விடிந்தாலும் அவா என்றே அவற்றை அழைத்தல் வேண்டும். தின்றதும் கழித்துவிடும் பொருள்களைத்தான் விலங்குகள் வேண்டுகின்றன. மனைவி மக்கள் என்பன எல்லாம் பலவிலங்குகளுக்கு நிலையாக இருப்பன அல்ல. மக்களிடத்தோ ஒவ்வோர் அவாவும் பற்றாய்முற்றி அவர்கள் அப்பொருளை விட்டு வெளிப்போகாத வண்ணம் மயக்கி விடுகின்றது. மனைவி மக்களை விட்டோடுவது ஒருபுறம் இருக்கட்டும். பிறந்த ஊரைவிட்டுப் பெயர விரும்புவார் யார்? அவ்வகையால் எல்லாம் விலங்கினும் உயர்ந்த அறிவுபெற்ற மக்கள் இவ்வகையால் எல்லாம் தாம் பெற்ற அறிவிற்கு அளவிலாக் கப்பங்கட்ட வேண்டி இருக்கின்றது. அவா இல்லையாயின் தொழிலும் இல்லை; துன்பமும் இல்லை.

**துன்ப ஏணி:**—விடாய் என்பது இயன்றியமையாப் பொருள்களின் மேல் செல்லும் உள்ள நிலை. நீர்விடாய் போல நீக்க அரிதாய் இருத்தலின் இவற்றிற்கெல்லாம் இப்பெயர் பொருத்த முடையதே யாகும். மக்களுக்கு நேற்றுண்ட பொருள்களின்மேல் எல்லாம் இன்று உள்ளம் பாய்கின்றது. முன்னுண்ட முப்பழம் இனித்தது எமது உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது. பின்னர் அம்முப்பழத்தைப் பார்ப்பதனாலோ, அதன் பெயரைப் பிறர் கூறக் கேட்பதனாலோ அப்பழைய உணர்ச்சி நினைவிற்கு வருகின்றது. இதனை நினைதல் என்பர். "நினைதல் என்பது விருப்புற்று நினைத்தல்; நின்னை மிகவும் நினைத்தேன் என்பது வழக்காதலின்." இதனையே அவா என்பர் பரிமேலழகர். "புலன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே?......அதனை...... அறுத்தல்" என அவாவறுத்தல் என்ற தொடர்க்குப் பொருள் கூறுதல் காண்க. அவாவின் உருவினைக் காட்டுவார் "எனக்கிதுவேண்டும் என்னும் அவா" என்று



விளக்கினார். இதனினும் ஆசை வேறெனக் கூறுவார், "அது (அவா) பற்றி அப்பொருட்கண் செல்லுமாசை" என்பார் இவ்வவாவிற்குப் பிறரெல்லாம் வேறு பொருள் கொள்வதால் "நினைதல்" என்பதையே நாம் கைக்கொள்வோம். இது தோன்றிய உடனே அழியினும் அழியும் முற்றினும் முற்றும். அவ்வாறு விரும்பி நினைத்த பொருள்களின்மேல் செல்லும் பற்றுள்ளத்தினை ஆர்வம் என்றும் கூறுவர்; வேட்கை என்றும் கூறுவர். நச்சினார்க்கினியர் வேட்கை என்பதற்கு "செய்யுண் மருங்கின் வேட்கை" என்ற இடத்திலும் "ஒப்புமுருவும்" என்ற இடத்தும் "வேட்கையாவது பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம்" என்று பொருள் கொண்டார். அவரே "அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி" என்ற இடத்தில் ஆர்வம் என்பதற்குத் "தம் நெஞ்சு கருதின பொருள்கள்மேல் தோன்றின பற்றுள்ளம்" என்று பொருள் கூறுவர் அந்நிலையில் உள்ளமானது கருதிய பொருளின்மேல் பொருந்தி நின்று இடையறாது நினைப்பதால் ஆர்வம் என்றனர். அப்பொருளை இன்றியமையாது வேண்டுதலின் அந்நிலையை வேட்கை என்றனர். ஆர்வம் வேட்கை என்பவை முன்னும் பின்னுமாகிய நிலைமைகள் என்றாலும் அமையும். வேட்கையால் உண்டாகுவது அவா, என்பர் நச்சினார்க்கினியர். "அவாவாவது அப்பொருள்களைப் பெற வேண்டும் என்று மேல் மேல் நிகழும் ஆசை" என்று "செய்யுண் மருங்கின்" என்ற இடத்தில் விரித்துரைத்தார். நினைவு விருப்பாய் முற்றித் தொழிலாய்ப் பழுக்கின்ற நிலையையே இவர் அவா என்கின்றார். ஒருவன் அந்நிலையில் அவா நிலையில் இருக்கின்றான்; விரும்பிய பொருள் இன்றியமையாததாகின்றது. எவ்வாறேனும் பொருளை அடைய வேண்டுகின்றான். அஃதின்றி உயிர்வாழ முடியாதென்று ஏக்கம் கொள்கின்றான். தூக்கமும் கொள்ளான். உணவுபோல இன்றியமையாததென அந்த அவா எனும் பேய் அவனை மருட்டிப் பிடித்து ஆட்டுகின்றது. விடாய்போல் ஆய்விடுகின்றது. பற்றாய் முற்றுகின்றது. வயாவாய்ப் பழுக்கின்றது. அதனைப் பெறவேண்டி அல்லும் பகலும் அறுபது நாழிகையும் உண்ணாதும் உறங்காதும் உழல்கின்றான். தொழில் எனும் சுழலில் அழுந்திச் சுழல்கின்றான். உழைப்பே பிழைப்பாய் உலர்ந்து எரிகின்றான். வேண்டியது பெறின் களிப்படைகின்றான். பெறாவிடில் நெட்டுயிர்ப் பெறிந்து அவலக் கவலைக் கையாறெய்தி அழிகின்றான். உயிர்ப்பென்பது வேண்டிய பொருளைப் பெறாதவழிக் கையறவெய்திய கருத்து. அவலமாவது தம் மெண்ணம் நிறைவேறாததால் நெஞ்சிற் றோன்றும் வருத்தம். வயாவாவது அவாவே நோயாகிய நிலை, கருவுற்று இருப்போர் கண்ட பொருளைக் கருதிக் கை கால் வீங்கிப்போதல் காண்க. கையாறென்பது "அவ்வுயிர்ப்புமின்றி வினை ஒழிந்தயர்தல்." பொருளின் நுகர்ச்சி-நுகர்ச்சியின் உணர்ச்சி(மனதில்)மற்றதன்பதிவு - நினைதல் - ஆர்வம் - வேட்கை - அவா - விடாய் - வயா - கவலை - அவலம் - உயிர்ப்பு - நெட்டுயிர்ப்பு - கையாறு - இதுவே துன்பத்தின் வான்முறை. எல்லோரும் இவ்வுள்ள நிலைகளை இப்பெயர் கொண்டே வழங்குவதில்லை. பரிமேலழகியார் வேறு வகையாகப் பெயரிட்டு வழங்குவதை முன்னரே கண்டோம். சேக்கிழாரும்.

> முன்பு செய்தவத்தின்ஈட்டம் முடிவிலா இன்பமான
> அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம்பொங்கி
> மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையைநோக்கி
> என்புநெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்

என்ற இடத்து "நினைதலை" ஆர்வம் என்றும், "ஆர்வத்தை"க் காதல் என்றும், "அவாவினை"ப் பெருவேட்கை என்றும் ஆண்டிருத்தல் குறித்துவைக்கத் தக்கதாம். இதுநிற்க. எண்ணிய தெல்லாம் நிறைவேறப் பெற்றவன் இவ்வுலகில் ஒருவனும் இல்லை. அதனால் துன்ப மில்லாதவனும் ஒருவனும் இல்லை.

**இன்ப வழி அன்பே:**—இனி இவ்வவா எனும் எரிவாய் நிரயத்தின் நின்றும் தப்பிப் பிழைப்பது எங்ஙனம்? அவாவினை அடியோடு விடுவது என்றால் தொழில் ஒன்றும் நடவாது. உலகம் நடைபெறாது. தமிழர் கண்ட உண்மை என்ன என்றால் அவாவினை அன்பாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதே. விலங்குகளுக்கு விடாய் ஒன்றே உண்டு. நேற்று நாளை என்று அறிந்த மக்களுக்கு அவ்விடாய் அவாவாக மாறி அவர்களது அறிவின் பெருமையைக் காட்டுகின்றது. கண்டதைத் தின்பவன் காட்டாளாம். வாய்க்குணவாக வயணமாக உண்பவர்கள் மக்களாம். நினைவு என்பது இல்லையாயின் முன்னர்க் கண்டு துய்த்த பொருள்களின்மேல் உள்ளம் பாய்வதில்லை; அவாவும் அரும்புவ தில்லை. விலங்குகளுக்கும் முன்னினைவு சிறிது உண்டு. தென்னாலி இராமனின் பூனை கொதிக்கும் பாலையுண்டு நாக்கு வேவப் பெற்றுப் பின் பாலைக்கண்டதும் வெருண்டோடிய கதை இதனை வற்புறுத்தும். ஆனால் மக்களுக்கு உள்ள அளவு விலங்குகளுக்கு இல்லை என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததாம். அதனால்தான் அவா என்பது மக்களது சிறப்பியல்பாக இராநின்றது. மக்களிற் சிறந்து, உலகை நீத்தபெரியோராய், உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காத்துக் குணமென்னும் குன்றேறி நின்ற நிறைமொழி மாந்தர் இவ்வவாவினை அன்பாக மாற்றி அந்தணர் எனப் பெயர் பெறுவர். பிறப்பிற் பெரியர் எனப் பேசிக்கொள்வோர் அந்தணர் அல்லர். அன்புருவானவர்களே அந்தணர் என்றார் திருவள்ளுவனார்.

> "அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

இவ்வறவோர் மக்களிலே கடவுள் தன்மை பெற்றோர் ஆவர். எனவே விலங்குகளுக்கு விடாயும், மக்களுக்கு அவாவும் அந்தணர்களுக்கு அன்பும் சிறப்பியல்புகளாம். விலங்குகள் விடாய் தணிந்தால் ஆறுதலையும், மக்களாயினார் அவா நிறைவேறினால் கள்ளுண்டாரைப்போலக் களிப்பினையும், அந்தணர் அன்பு நிரம்பினால் இன்பத்தினையும் அடைகின்றார்கள். ஆகவே அன்பு உள்ள இடத்தில்தான் இன்பந் தோற்ற இடமுண்டு.

டி. பி. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 17.

## நள வெண்பா

(312-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

இவன் நளனே அல்லனே என உற்ற சந்தேகத்தைத் தமயந்தி அவனைகேட்டுத் தீர்த்துக்கொண்டாள். எந்த நிலையிலும் மாதருக்கு மனத்திட்பம் அதிகமாதலால் இவ்வாறு அவன்கேட்கவும் தெரிந்துகொள்ளவும் நேர்ந்தது. அந்நிலையில்கூட அவன் தன்னை யாவனென்று காட்டிக் கொள்ளாமல் 'எங்கள் கன்னிமாடம்' எனத் தன்னைப் பொதுவாகவே பேசிக்கொண்டனன். நளனே அவளைத் தமயந்தி என்று ஊகித்திருக்க முடியுமே அல்லாது நிச்சயமாய்த் தெரிந்திருக்க முடியாது. எனினும் ஊகித்ததைக்கொண்டே தான் சொல்லவந்த தூதை உரைக்கப்படாது என்பதை அயர்ந்து, வினவித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதும் அவனுக்குத் தோன்றாது, "மென்மாலை சூட்டுவாய்" என்று முன்னிலையிலேயே கூறிவிட்டான். இதைக்கேட்க அவளுக்குத் துன்பம் பெரியதா யிருக்குமெனினும் நினைவும் வாயும் அயராது தன்னைப் படர்க்கையிலேயே வைத்து வேறு யாரையோ போல் பதில் சொல்லி அனுப்புவதைப் பின்வரும் இரண்டு பாசுரங்கள் கூறுகின்றன.

இயமரநின் றார்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்ன வகுத்த—சுயம்வரந்தா
னின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்கு
[டையான்
தன்பொருட்டா ணைவா டளர்ந்து. 77.

"முரசும் காளமும் சங்கமும் ஒலிக்க நிகழ்கின்ற இந்தச் சுயம்வரம், வேந்தனே, உன் பொருட்டாகத் தான் என்பதைத் தெரிந்துகொள்" என்றாள் தமயந்தி. தனக்கு நடக்கின்ற சுயம்வரம் என்று அவள் சொல்லவில்லை. நளனைக் கருதி இச்சுயம்வரம் நாட்டப் பெற்றிருக்கின்றதென்பது அவனுக்குத் தெரியவேண்டியது அவசியமாதலால் இதனைக் கூறினாள். தான் காதல் கொண்டிருந்த வொருவன், "நீ வேறொருவனை மணந்துகொள்" என்று கைகாட்டி விடுவானானால் பிறகு அவன்முன் தன்முகத்தைத் தெரிவித்துக் கொள்ள ஒருத்திக்கு மனம்வருமோ? ஆதலால் தான் தமயந்தி அல்லாள்போல் பாவனை புரிகின்றாள். தன்னை இவ்விதம் படர்க்கையாக்கிக்கொண்டது அடுத்த செய்யுளில் இன்னும் தெளிவாகக் காண்கின்றது.

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தாள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்றா ளெடுத்து. 78.

"பிரகாசம் பொருந்திய செழுமையான வெண்முத்தக் குடையையுடைய அரசனே, தாமரை மலர்போன்றனவும் செவ்வரி படர்ந்தனவுமாகிய கண்களையுடைய தமயந்தி தமக்கு அழகிய மாலையைச் சூட்டவேண்டுமென்ற ஆசையுடைய அரசர்களோடே, சுயம்வர மண்டபத்திற்கு நீயும் தேவர்களும் வந்து சேரக்கடவீர்" என்று கூறினாள். தான் தமயந்தி அல்லள் என அவன் நினைக்கும் பொருட்டே 'போதரிக்கண் மாதராள்' என வர்ணித்துப் படர்க்கையில் அவள் கூறியது.

இதன்பின் நான்கு செய்யுள்கள், நளன் திரும்பித் தேவர்களிடம் சென்று நடந்ததைச் சொல்லியதும், அவர்கள் இவனது சத்தியத்தை மகிழ்ந்து வரங்கள் கொடுத்ததும், மேல் யாவரும் தமயந்தியின் நகரிற்கு வழிக் கொண்டதையும் கூறுகின்றன.

வானவர்கோ னேவல் வழிச்சென்று வானுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து. 79.

விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பொண்ணணங்
[கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. 80.

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
யெங்குநீ வேண்டினமற் றவ்விடத்தே--சங்கையறப்
பெற்றா யெனவருண னுகண் டலன்றருமன்
மற்றோரு மீந்தார் வரம். [கள் 81.

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்
தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச் [மங்கை
சுயம்வரந்தான் கண்டதோர் சார்பு. 82.

இது இவ்வாறாக. இனித் தமயந்தியின் நிலையினைக் கவி வருணிக்க ஆரம்பிக்கின்றார்.

தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து. 83.

பதப்பிரிவு:—தூது உவந்த காதலனை சொல்லி செல விடுத்த மாது வந்து பின் போன வல் நெஞ்சால் யாதும் அயிர்த்தாள் உயிர்த்தாள் அணி வதனம் எல்லாம் வியர்த்தாள் உரை மறந்தாள் வீழ்ந்து.

#### பதவுரை.

தூது - பிறர்பொருட்டுத் தூதாக வர
உவந்த - இசைந்த
காதலனை - தன் அன்பனை
சொல்லி - சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி
செல - போக
விடுத்த - அனுப்பிய
மாது - பெண்ணாகிய தமயந்தி,
வந்து - அவனோடு வரும்போது வந்து
பின் - அவனுக்குப் பின்னேயே
போன - அவன் போனபோது போய்விட்ட
வல் - தனது கொடிய
நெஞ்சால் - மனதினால்,
யாதும் - நிகழ்ந்தன யாவையும்
அயிர்த்தாள் - சந்தேகப்பட்டாள்.
உயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள்
அணி - அழகிய
வதனம் எல்லாம் - தன் முகம் முழுவதும்
வியர்த்தாள் - வியர்க்கலாயினாள்
வீழ்ந்து - தரையில் விழுந்து
உரை - பேச்சையும்
மறந்தாள் - அயர்ந்து போயினாள்.



விரிவுரை:—தமயந்திக்கு அவள் மனம் செய்த சதி பெரியது. அன்னம் வந்து இவளிடத்தில் நளனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவளோடு உடன் பிறந்து ஒன்றாய் வளர்ந்த மனம் அவளை விட்டு விட்டு ஓடிப்போய் நளனிடத்திலே தங்கிவிட்டது. பிறகு அவன் வந்தபோது கூடவந்து, அன்பின்றி அவன் பிறர்பொருட்டுத் தூது பேசினான் என்பதையும் எண்ணாமல், அவன் போம்போது கூடவே போய்விட்டதென்றால் அதன் சபலகுணத்தை என்னென்று சொல்வது. நிகழ்ந்த விஷயங்களைப்பற்றி இவ் வோடுகாலிமனத்தைக் கொண்டுதான் யோசிக்கவேண்டியவளா யிருந்தாள். மனம் இவ்விதம் மாதரைவிட்டுப் போய்விடுகின்ற வழக்கத்தைக் கம்பர் சீதையைக் கொண்டு செவ்வனே சொல்லிக்கின்றார். கடிமணம் நடப்பதற்கு முதல்நாள் சீதாபிராட்டிப் பொழுதுபுலரும் வரையில் பொறுத்திருக்க ஆற்றாளாகித் தன்மனம் தன்வயமா யிருக்குமாயின் அவ்வாறு பொறுத்திருக்க இயலும் என்று எண்ணி, அதற்காகத் தன்னைவிட்டு முன்பு கன்னிமாடத்தில் கண்ட போதே இராமனின் காலைத்தொடர்ந்து போய்விட்ட தன் மனதை அவ்வொரு வீரவேனும் தன்னோடு வந்து தங்கியிருக்கும்படி வேண்டுகின்றவளாய் அதன் செய்கையைப் பழித்துத் தன்பால் அழைக்கின்றாள்:—

கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ.

"கருநிறம் வாய்ந்ததெனினும் காந்தியோடு கூடிய சூரியன் ஒன்று இருக்குமாயின் அதைப்போன்றவர் (இல்பொருள் உவமை அணிக்கு இதுவோர் உதாரணம்) காலோடே கூட அன்றைக்குப்போய், நாளைக்கு அவர் வரும்போது பக்கத்திலே வருவதற் கிருக்கின்ற மனதே, இனி எவ்வளவோ காலம் அவரைவிட்டு அகலாது திரிய வேண்டியதா யிருந்தும், இன்றைக் கொருநாள் முன்னதாகவந்து என்னிடத்தில் இருந்தாலென்ன! இத்தனை காலம் என்னோடு வாழ்ந்த நீ ஒருநாள் அவரைவிட்டுப் பிரியச் சகியாமல் என்னைக் கைவிடுவது அழகா", என்பது இச்செய்யுளின் கருத்து.

உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போற்—பிள்
புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி [ளைமீன்
யுள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர். 84.

பதப்பிரிவு:—உள்ளம் போய் நாண் போய் உரை போய் வரி நெடும் கண் வெள்ளம் போய் வேகின்ற மென் தளிர்போல் பிள்ளை மீன் புள் அரிக்கும் நாடன் திரு மடந்தை பூ வாளி உள் அரிக்க சோர்ந்தாள் உயிர்.

அன்வயம்:—பிள்ளைமீன் புள் அரிக்கும் நாடன் திருமடந்தை, பூவாளி உள் அரிக்க, உள்ளம்போய் நாண் போய் உரைபோய் வரி நெடும்கண் வெள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல் உயிர் சோர்ந்தாள்.

#### பதவுரை.

பிள்ளைமீன் - குட்டிமீன்களை
புள் - கொக்கு முதலிய பறவைகள்
அரிக்கும் - தின்னும் தன்மை வாய்ந்த
நாடன் - விதர்ப்ப நாட்டையுடைய வீமனது
திரு - அழகிய
மடந்தை - மகளாகிய தமயந்தி,
பூ - புஷ்பங்களாலாகிய
வாளி - (மன்மதனது) பாணங்கள்,
உள் - தனது உள்ளே
அரிக்க - துளைப்பதால்,
உள்ளம் போய் - நினைவு நீங்கி,
நாண் போய் - நாணம் அற்று,
உரை போய் - பேச்சும் சோர்ந்து,
வரி - செவ்வரி கருவரி படர்ந்த
நெடும் - பெரிய
கண் - கண்களில்
வெள்ளம் - நீரும்
போய் - வற்றிப் போய்,
வேகின்ற - நெருப்பில் வேகின்ற
மென் - மிருதுவாகிய
தளிர்போல் - தளிரைப் போல்
உயிர் - உயிர்
சோர்ந்தாள் - சோர்ந்து போனாள்.

விளக்கம்:—மடந்தை - அரிக்க - போய் - போய் - போய் - போய் - தளிர்போல் - சோர்ந்தாள். இந்தப் பதங்களோடு பொருந்திய மொழிகளைச் சேர்த்து வினா விடையாக ஒருதரம் விளக்கம் நீங்களே எழுதி அப்பியாசம் செய்வது நலம்.

விரிவுரை:—மன்மதனது பாணங்கள் அவளுள்ளே பாய்ந்து குடைந்ததால் உள்ளம் போயிற்று, அதாவது தன்வயம் துறந்து போனாள். ஆதலாலே அவளுக்கு நாணத்தைக் காக்க முடியவில்லை. வாயில் வந்தபடி தன் காதலைக்கூறிப் புலம்பினாள். சிறிது பொழுதில் அப்புலம்பலும் அடங்கிவிடக் கண்களிலிருந்து வெள்ளம் பெருகிப் பெருகிப் பிறகு அதுவும் வற்றிப்போய்த் தீயில் பட்ட தளிரைப்போல் சுருண்டு போயினாள், என்று கவி படிப்படியாக அவள் நிலைமையை வருணித்துக் காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமயந்தியைப் பிள்ளைமீன் புள்ளரிக்கு நாடன் திருமடந்தை என வழைத்தது மிகவும் பொருத்தமாயிருக்கின்றது. தன்மேல் காதலில்லாததால் நளன் இவ்வாறு செய்தான் எனப் பேதுற்றதைக் கண்ட புகழேந்தி அவளது கபடற்ற தன்மையைக் காட்டுவதற்காகப் 'பிள்ளை மீன்களைப் புட்கள் தின்று விடுகின்ற நாட்டில் பிறந்தவள்' என்று காட்டுகின்றான். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருத்தல் கொக்கின் குணம். அவ்வாறிருக்க இவ்விதர்ப்ப நாட்டுக் கொக்குக்களுங்கூடச் சாமர்த்திய மற்றனவாய், வந்த மீன் சிறு மீனாயிருந்தாலும் கொத்திவிடுகின்றன என்னின் அங்குப் பிறந்து வளர்ந்த தமயந்தியின் கபடற்ற தன்மையைக் கூறவும் வேண்டுமோ.

இவ்வாறு குறிப்பினால் ஒரு விஷயத்தைக் காட்டுகின்ற சொல்திறத்திற்கு உள்ளுறை உவமம் என்று பெயர். தமயந்தி கபடற்றவள் என்று காட்ட விரும்புகின்ற கவி, "குழந்தைபோல் அவள் சூதுதெரியாதவள்" என்ற இன்னபடி சாதாரண உவமையிற் சொல்லாமல், "கொக்கும் தன் இயற்கைக் குணத்தைவிட்டுச் சிறுமீன்களைத் தின்று விடுகின்ற நாட்டில் பிறந்தவள்" என்ற குறிப்பினால் அதன் குணத்தையும் அவளோடு சேர்த்துக் கபடற்ற தன்மையை அவளுக்குச் சேர்ப்பிப்பதால் அந்த உவமை வெளிப்படையா யில்லாமல் இத்தனை விஷயங்களுக்கு உள்ளே உறைந்திருக்கும் காரணத்தைப் பற்றி இவ்வாறு கூறுவதற்கு உள்ளுறை உவமம் எனப் பெயர் வந்தது. ஐங்குறுநூறு என்னும் நூலை எடுத்துப் பார்ப்பீர்களானால் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ளுறை உவமம் அமைந்திருக்கின்ற அழகைக் காண்பீர்.

ஒருதாரணம் இங்குக் காட்டலாம்:—

189000

விவாகமான சில காலத்திற் கப்பால் ஒருவன் தன் நாயகியை விட்டுவிட்டு வேசியர்களோடு போய்ச் சேர்ந்து தங்கினான். அங்கும் அவன் ஒருத்தியோடே நில்லாமல் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான் என்பது மனைவிக்குத் தெரியவந்தது. இப்படிச் சிலகாலம் கழிந்தபின் அவன் பரத்தையர் உறவில் வெறுப்புற்று மீண்டும் தன் நன்மனையாளை வந்து அடையவேண்டும் என்னும் விருப்பம் உடையவனாய்த் தன்னையவள் பொறுத்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டச் சில தூதரை யனுப்பினான். அத்தூதர் வந்து இவ்விதம் வேண்டியபோது தோழி தன் தலைவிக்குச் சொன்னதாக அடியில்வரும் பாட்டுப் பாடப் பட்டிருக்கின்றது.

தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூ
ரெய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னாய்

இப்பாட்டின் முதல் இரண்டடிகள் தலைமகனது ஊரை வர்ணிக்கின்றன. "தாய் சாகப் பிறக்கும் நண்டுகளையும், தன் குட்டிகளையே தின்னும் முதலைகளையும் உடையது அவன் ஊர்" என்பது அர்த்தம். தன்னைச் செய்ததைக் கொல்வது நண்டு. தான் செய்ததைக் கொல்வது முதலை. இவ்விரண்டும் இருக்கின்ற ஊரைச் சேர்ந்தவனாதலால் இவன், தன்னைக் காதலித்த மனைவியைவிட்டுச் சென்று தான் காதலித்த பரத்தைகளையும் விட்டு விடுகின்றான் என்ற பொருள் உள்ளே அடங்கியிருக்கின்றது. இது உள்ளுறை யுவமம்.

பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனாலு மவ்வழியே—பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து. 85.

கருத்து:—"மன்மதன் எய்த புஷ்ப பாணங்களால் உண்டான புண்களின் வழியே என் உயிர்தான் போய் விட்டாலும்கூடப் பாவியாகிய எனக்கு நளன்மீது இருக்கின்ற ஆசைமாத்திரம் ஒருநாளும் போகாது" என்று வீணையின் நாதத்தைப்போன்ற சொற்களையுடைய தமயந்தி சொல்லிப் பெருமூச்சுவிட்டு உள்ளங் கரைந்தாள்.

## பிரெடெரிக் நீஷேயன்.

"Life is a means of experience."
"Live wholly, live fully."

"I teach you one Superman. Man is something to be surpassed...........Man is a rope stretched between the animal and the Superman...............I love him who liveth in order to know, and seeketh to know in order that the Superman may hereafter live. I love him who laboureth and investeth that he may build the house for the Superman, and prepare for him earth, animal and plant...,........"

"Amid the warriors
His was the lightest heart.
Amid the conquerors
His brow was dark with thought—
He was a fate poised on his destiny;
Onbending, casting thought into the past
And future, such was he."

பீடிகை:— அந்நாள்தொட்டு இந்நாள்வரையிலும் ஓங்கி வளர்ந்து பிரகாசித்துப் பின் கீழ்மையடைந்து மழுங்கி மறைந்த தேசங்கள் - ராஜாங்கங்கள் - சங்கங்கள் - குடும்பங்கள், எல்லாவற்றிலும் பூர்வாசார பரிபாலனம்—(conservatism) உதாரசீலம் (Liberalism) என்ற இருதிறக் குணாதிசயங்கள் குடியேறிக் கிளர்த்தித் தாழ்த்தி யுயர்த்தி மாற்றிய, இன்னமும் மாற்றிவருகிற, விஷயம் பற்பல சரிதங்களால் நிரூபிக்கப்பட்டுக் கிடக்கின்றது. சுகம் என்ற குடிசையில், பழக்க வழக்கங்கள் என்ற உடைகள் தரித்து, அடக்கம் அல்லது பணிவு என்ற தாளிட்டு உறங்குபவர்கள் பூர்வாசார பரிபாலகர் (Conservatives) "மேலேறவேண்டும்; எவ்விதத்திலாயினும், இப்புவியில், ஞானம் விர்த்திசெய்து - மெய்யின்பம் பரவவேண்டும்," என்ற ஆர்வங்கொண்டு உழைப்பவர் உதாரசீலர் (Liberals.) மாந்தரின் சிறுமையை வலியுறுத்துபவர் முன்னவர்; மானிடராசியின் மாண்பை அறிவுறுத்துபவர் பின்னவர். முன்னவரின் மனமும் - ஹிருதயமும், இன்றிருந்து நாளையழியும் பொருள்கள்-விஷயாதிகளாற் கவரப்பட்டு உழல்வன; பின்னவரோ புத்தியைப் பெருக்கி - உள்ளத்தை விரித்து - ஞான அறங்களைப் பெற்று இனித்திருக்கவேண்டுமெனக் கொண்டவர். முன்னவர் சுய சுகபோகங்களை நாடி, மரணத்துறையிலிறங்கி அழிபவர்; பின்னவரோ பரிபூர்ண வாழ்க்கை - நித்தியானந்தப் பேறுகளுக்கான மார்க்கத்தைப்பற்றியொழுகி யொளிர்பவர். வீரியம் - தன்னம்பிக்கை - சுயவிசாரிப்பு - நிஷ்காமப்பணி முதலானவைகளை உடைத்தாயிராதவர், அவைகளின் சுசீலத்வத்தை உணராதவர், மெய்ம்மையை அங்கீகரியாதவர் முன் வகுப்பினர்; ஆனால், பின் வகுப்பினரோ அவைகளால் தூண்டப்பெற்று, அவைகளை ஆதாரமாகக் கொண்டு, கர்மங்களை உற்சாகத்துடன் இயற்றுபவர் - தீர்க்கதரிசிகள் - சீர்திருத்தக்காரர் - வரப்பிரசாதிகள் - புருஷோத்தமர்களெல்லாரும் பின் வகுப்பைச் சேர்ந்தவராவர். நரம்புகள் தளர்ந்து - நாடிகள் ஒடுங்கி - மனங் குறுகி - உள்ளங் குவிந்து, வறுமை - பிணி - அவிவேகங்களுக் குட்பட்டு அலப்புறும் மாக்களுக்குப் புத்துயிர் அளித்து, அவர்களை மேலெழுப்பும் சக்தி வாய்க்கப்பெற்றவர் பின்னவரே. 'பழமை' என்ற பேயாற் பீடிக்கப்பட்டு, நன்மை தீமை - மெய் பொய்களைக் குழப்பி, தீர்க்காலோசனை - சுயமுயற்சிகளைக் கைந்நெகிழவிட்டுத் தன்னம்பிக்கை - பரோபகாரங்களை இழந்து, சத்திய நெறியை வழுவி, வஞ்சக வழியைத் தழுவி, நாளாவர்த்தியில், நடைபிணங்களாகித் திரியும் மன்பதைகளை ஒழுங்குபடுத்தி - நிமிர்த்துபவர் பின்னவராம். எனினும், இத்தகையர்க்கு முன்னவர் உவந்து கொடுக்கும் பெருங்கொடை யாதெனில், சிறைச்சாலையும் - சிரச்சேதமும்-விஷமும் - இகழ்ச்சியுமாம்! இப்பின்னினத்தைச் சேர்ந்தவரொருவரின் ஜீவசரித்திரத்தை ஈண்டு எழுதத் துணிபுற்றோம்.

அபரிமித சக்தியை விரும்பி - உழைத்துப் பெற்றுச் சுகித்திருத்தலே வாழ்க்கையின் உள்ளக் கருத்தெனப் போதித்தவர் நமது நீஷேயன். மடமை - கயவஞ்சகம் - கோழைத்தனம் - போகப் பிரியம் - மூடபக்தியாகியவைகளைப் பரப்பும் தத்வக் கொள்கைகளும் - மதச் சாதனைகளும் - அதர்ம மார்க்கங்களும் உடலழிவுக்கும் - மனஇழிவுக்கும் - இதயச்சிறுக்கத்திற்கும் ஹேதுக்களாவதால், அவைகளை முற்றிலும் ஒழிக்கவேண்டும், அல்லது அவற்றினின்று மேல்வளர்ச்சிக்கு முரணான பாகங்களைப் பிரித்து விடுத்து, ஏனையவைகளைக் கொண்டு, அல்லது தேவைக் கேற்றபடி திருத்திப் பெருக்கி - மாற்றி - உய்யவேண்டுமென வெளியிட்டவர். இம்மைச் சுகபோகங்களுக்கும் மறுமை யின்பத்திற்கும் இன்றியமையாத சாதனம் சக்தியேயென அறிவுறுத்தியவர். தேகத்திறலை-மனவுறுதியை-ஆன்மவெளியை விருத்திசெய்வதே மெய்யின் இலக்கணமும்-இலக்ஷணமுமாகும்; பொருளும் பொருத்தமுமற்ற ஆசாரவுபசாரங்களென்ற கொடிய வலையிற் சிக்கித் திக்குமுக்காடும் எளியர்களைத் திடப்படுத்தி முன்பாயச் செய்வதே மெய்ந்நெறி தர்மமார்க்கமெனக் காட்டியவர். பயம் பொறாமை - பிரதிபழிச் சிந்தனைகளே தீமை எனப் புகட்டியவர். இவ்வுலகில், நன்மை தீமை, பாபம் புண்ணியம், என்ற வரம்புகளில்லை; கூடல் பிரிதல், இணங்கல் பிணங்கல் முதலாயினவைகள் பரிணமித்து நிற்கப்பெற்ற இவ்வுலகாதிகளின் இயக்கங்கள் தன்னுடைய சரீரத்தையும் மனத்தையும் பாதித்தற்கேற்றவாறு, அவ்வியக்கங்களை-நிகழ்ச்சிகளை மனிதன் நல்லன தீயனவெனப் பாவித்து மயங்குகிறானே யல்லாது, யதார்த்தத்தில், அக்குணாதிசயங்கள் இல்லையெனப் போதித்தவர்!

இன்னமும், ஈவு, இரக்கம் பச்சாத்தாபம் ஆகியவைகள் துர்ப்பலத்திற்கும்,வலி வருத்தங்களுக்கும் விளைநிலமாவன; தயாகுணம் மனிதனின் சக்தியைக் குலைப்பதாகும்; துக்கம் - ஏக்கம் என்பனவாதிகளை யறியாத, அநுபவியாத ஒருவன் அவ்வவதிகளுக் குட்பட்டவரைக் கண்டு, இரங்கிச் சொற்செயல்கள் மூலமாக அவர்களுக்கு உதவி, பின்னும் அவைகளைப் பற்றி மேன்மேலும் ஆராய்ந்து, முற்றிலும் அழிக்க யத்தனிக்கின்றான்; அவ்வுதவிகளால் - பிரயத்தனங்களால் - எவர்க்கு என்ன நன்மை உண்டாயிற்றோ? துக்கம் எவ்வளவு குறைந்ததோ? ஒன்றுமில்லை! ஆனால், செழிப்புடன் பரவியே வருகின்றது! கொடையளிப்பவருடைய, இளகிய உள்ளமுடையவர்களின் கதி யாதோ? அவர்களும் சோகத்துட்படிந்து, எப்போழ்தும் பிறர் கஷ்டநஷ்டங்கள் - இன்னலிடர்களி லீடுபட்டுச், சுயவளர்ச்சியைத் தவறவிட்டு, ஒங்கித் துடிக்க வாரம்பிக்கின்றார்கள் போலும்! ஆதலால், அவ்விபரீதங்களில் தலையிடாது, ஒவ்வொரு ஆன்மாவும் சுய வளர்ச்சியை யவலம்பித்து உழைக்கச்சுய சக்தியைப் பெருக்கவேண்டும்; இடையில் எதிர்ப்படும் தடைகளைத் தகர்த்துத் தள்ளவேண்டும், நிகழும் கஷ்ட நஷ்டங்களை - இடையூறு இடுக்கண்களை - வென்று அகற்றி, அல்லது பொறுத்து அடக்கி முன் செல்லவேண்டும்; நொய்ந்த பிராணிகளை, தேக வலிமையற்றவர்களை, சிற்றறிஞர்களை இப்புவியினின்று அகற்றிவிடுதல் முறைமையே; பிறர்க்கு நேரிடும் அவதிகளைப் பொருட்படுத்தக் கூடாது, என்ற கொள்கைகளை யுடையவர்.

இன்னமும், சேர்க்கைப்பிரியம் (Sociability) மிகுந்த சுயஞானமற்ற பயவுணர்ச்சி பூரிக்கப்பெற்ற மாந்தர்களால் கற்பித்துத் தொழப்படுவதாம் அறம் என்பது; அறத்திற்கு ஆதாரம் அச்சம்; தர்ம ஸ்தாபனத்திற்கும் வியாபகத்திற்கும் துணைக்கருவியாவது அவ்வச்சமேயாம்; துர்ப்பலர்களும் மடியர்களும் அவிவேகிகளும் வலியர்களால் தாம் சூழப்பட்டிருப்பதைப் பார்த்து நடுங்குகையில், சில 'மகான்கள்,' 'தயாளர்' முன்வந்து, அறம்-மறம், நன்மை - தீமை, உயர்வு - தாழ்வு,நரகம் சொர்க்கம் என்பனவாதிகளைப் பிரதிட்டிப்பித்து, வன்மையர்களையடக்கிப் பலஹீனர்களைப் போற்றவே, நாள் செல்லச் செல்ல, எங்கும், துர்ப்பலமும்-பிணியும் - மிடியும் - கபடோபாயங்களுமே மல்கி - மானுடவுலகை நிலைகுலைத்துவிடுகின்றன வெனப் பகிரங்கப்படுத்தியவர்.

இன்னமும், ஆற்றுவெள்ளம் நாலாபக்கங்களிலும் இழிந்தோடுதல்போல், தாமரை கம்பீரமாக உயர்ந்து மலர்தல்போல், மல்லிகையின் நறுமணம் எத்திக்கிலும் தாராளமாக வீசுதல்போல், புல்பூண்டு தழைகளை ஒதுக்கி எழும்பும் கதிர்கள்போல், தட்டுத்தடைகளை அலக்ஷியஞ்செய்து, பிறர் சுகதுக்கங்களையும் - இன்ப துன்பங்களையும் பாராட்டாது வீரர்கள் தம் வீரியத்தை வெளிப்படுத்துகின்றனர்; சூரர்களின் செயல் எரிமலையினதை ஒத்துளது எனத் தெரிவித்தவர். மானுடனொவ்வொருவனும் பலசாலியாக விளங்கவேண்டும்; போர்-கலகம் - புரட்சிகள் மூலமாகத்தான் வலிமை வெளிப்பட்டு, வியாபித்து, நிலைக்கும்; போர் என்பது ராஜ்யங்கள்மீது படையெடுத்துச் சென்று, வெற்றி பெறுவது மாத்திரமல்ல; பண்டைப் பற்று - நவீனக் கொள்கை குடியேற்றம், சமூகக் கட்டுபாடு சுதந்தரம், கீழ்த்தர நிலையற்ற நன்மைகளை அவாவி அயலார்களின் ஆக்ஞை இஷ்டங்களை அநுசரித்து நடக்கவேண்டியிருத்தல், சுய விசாரிப்பினால் அல்லது உள்ளக் கிளர்ச்சியால் சுயத்வத்தை அபிவிர்த்தி செய்ய விரும்பி நிருணயித்தல் முதலானவைகள். ஒவ்வொரு விநாடியும், ஒன்றையொன்று எதிர்த்து, ஒவ்வொரு ஆன்மாவையும் கலக்கி, நிலைதடுமாறச் செய்கின்றன; இப்போராட்டத்தில், மனம் புழுங்கித் தளர்வுறாது பிறர் போக்கையும் - தூஷணையையும் - அவமதிப்பையும் சிந்திக்காது, ஸ்வய மேன்மைக்கான நெறியைப் பற்றி மேன்மையுறலே சால்புடைத்தென உபதேசித்துளார்.

இன்னமும், மானுடராசியில், புருஷோத்தமனை விட மிக்க உயர்ந்த கிடைத்தற்கரிய செல்வம் யாதெனில், பூர்ணப் பெண்மை வாய்க்கப்பெற்ற மாது சிரோமணியே யெனவும்; புஜபலமும் - மனவுறுதியும், விசாலமுமுடைய சத்புருஷர் ஜனனத்திற்குக் காரணமாயிராத, அனுகூலிக்காத விவாகம் விவாகமல்லவெனவும்; இக்காலத்திய பழக்க வழக்கங்களை உற்றாராயுங்கால், கேவலப்பாசமே அநுராக (Love) மாகவும், பொருளாசையே மணவாழ்க்கையின் அஸ்திவாரமாகவும் விளங்குகின்றன வெனவும், இவ்விஷயங்கள் வெறுத்தற்குரியன வெனவும்; திடகாத்திரமும் சீரிய மனப்பாங்கும் உடையவரே கிரஹஸ்தாச்ரமத்திற் புகுந்து இருக்கத்தக்கவரெனவும்; தெவிட்டாத பரஸ்பரவன்பும் பாசக்கட்டும் மாறுபடாத, அத்தியந்த விசுவாசமும் உயர்ந்த நோக்கமும் இணங்கப் பெற்றவர்களுக்குள்தான் அநுராகம் என்ற மலர் அலர்ந்து, மணம் என்ற கனி பழுத்து, அதி உத்தம மகவு என்ற பலனுண்டாகு மெனவும்; தீராப் பிணியர்களும் தரித்திரர்களும் மடியர்களும் அங்கஹீனர்களும் உன்மத்தர்களும், ஒருபொழுதும், மணந்து சந்ததி விருத்தி செய்யக் கூடாதெனவும்; கணவனுக்கும் மனைவிக்கும் பிணக்கம் உண்டாகி, இப்பிணக்கம் நீங்கிப் பழைய இணக்கம் ஏற்படுதற்கு இடமில்லாவிடின், காலதாமதஞ் செய்யாமல், அவர்கள் பிரிந்துவிடலே தக்கதெனவும்; இவ்வாறு செய்யாமற் போனால், நாளுக்கு நாள், உட்பகையும் கபடநடிப்பும் இவற்றினின்று எதிர்பாராத துர்ச்சம்பவங்களும் தோன்றி வளர்ந்து துன்புறுத்து மெனவும்; காதலனுங் காதலியும் ஒருவர் மற்றவருடைய குண நடத்தைகளைச் செம்மையாகப் பார்த்தறிந்து, இருவரும் மனமொத்து ஒழுகுதற்கியலுமெனத் துணிபுற்ற பின்தான் அவர்கள் இல்லறத்தையேற்று வாழவேண்டுமெனவும் விளக்கியவர்.

ஜெர்மனியிலுள்ள 'ரோக்கேன்' என்ற இடத்தில், 1844-ம் வருடம் அக்டோபர் மாதம் 15-ந் தேதியில், பெரிய குடும்பமொன்றில் பிறந்தவர்.

இளம்பருவத்திலேயே, பின் ஓர் பெரிய மதபோதகனாகத் திகழவேண்டுமென எண்ணினராம்.

1858-ம் ஆண்டில், போர்ட்டாவிலுள்ள கல்லூரியில் ஓர் மாணவனாகச் சேர்ந்து, கல்வி பயின்றுவந்தார். சிறு வயது முதற்கொண்டே மதம் தத்துவம், அறம் மறம், முதலாயினவைகளைப் பற்றியஉண்மையை யறியவேண்டுமென்ற ஆவல் அரும்பி மலர வாரம்பித்ததாம். நுண்ணறிவு, சமயோஜித நடை, கண்ணியங்களுடன் அப்பள்ளியிலுள்ள போதகர்களுடனும், தன் சிநேகிதர்களுடனும் பழகி வந்தனராம்.

1864-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில், போன் என்ற நகரிலுள்ள சர்வகலாசாலையில் சேர்ந்து, உயர்தரக் கலைகள் கற்றுவந்தார். இவ்விடத்திலிருந்து வருகையில், கொஞ்சகாலம் வரையிலும், தன் நண்பர்களுடன் கூடி மிக்க மனோரம்மியத் துறைகளிலிறங்கிக் கடைசியில், அவ்வாழ்க்கை உல்லாசங்களை வெறுத்து, அதிக சிரத்தையுடன் படிக்க வாரம்பித்தனராம். பாஷா தத்வத்தையும், பக்தி மதநூற்களையுமே மிக்க ஆர்வத்துடன் படிப்பது வழக்கமாம். எனினும், நாளுக்கு நாள் கிறிஸ்துவ மதத்தைத் தூஷித்து உதறித் தள்ளினராம். அதைக் கேள்வியுற்ற இவருடைய தாய் மிகவும் நொந்து, அச்செயலின் அபாயத்தையும் இழிவையும் அவன் இவர்க்குக் காண்பித்து எச்சரித்தபொழுது, இவர் தன் சகோதரிக்குப் பின்வருமாறு பதில் எழுதினராம்:—

ஆத்ம சாந்தியும் சுகமும் பெற இச்சித்தால், பிறர் சொற் செயற்களையே நம்பிப் பற்றி ஒழுகுவாயாக; ஆனால், உண்மையின் மகவாக, அல்லது சிஷ்யையாக விரும்பினால், இவ்வுலகாதிகளைச் சுயமாக உற்றாய்ந்து பார்த்து, ஆலோசித்தறிவாயாக.

வேறொரு கலாசாலைக்குச் சென்று படித்துவருகையில், யவனர்களின் (The Greeks) வாழ்க்கை - எழிற்கலைகள், தத்துவ நூல்களின் சிறப்பைப் பழுதறத் தெரிந்து, இவ்வுலகம் மீண்டும் உச்சநிலையுற்று நிற்க வேண்டுமாயின், யவனர்களின் மார்க்கத்தையே அநுசரித்து நடக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். இவருள் ஏற்கனவே மினுமினுத்து வந்த கருத்துக்களுடன் அச்சாதியாரின் லக்ஷியங்கள் ஒத்திருந்தமையால், அவைகளை முற்றிலும் அங்கீகரித்து, உள்ளம் உவந்தனராம். நூதன விஷயங்களை, திகிலைத்துடைத்து விறலை விர்த்திக்கும் வழிகளை, மேன்மேல் அறிய அவாவினராம். ஆதலின், யவனரின் லக்ஷியமான இம்மைப்போகம் உலக அறிவு தைரியம் பலம் தூய்மை - அபூர்வ, அபாய வழிகளிற்பற்று, நானாவிதக் கர்மங்களியற்ற வேண்டுமென்ற ஆசை குடிகொள்ளவே, கிறிஸ்துவ மதத்தின் விசேஷ குணங்களான க்ஷமை, அதாவது தீமைக்குப் பிரதிதீமை செய்யாமை, உள்ளக்கனிவு அதாவது எளியார்க்கிரங்கி யீதல், நேர்மை, அதாவது பாபச் செயற்களில் தலையிடாதிருத்தல் முதலானவைகள் உடற்சோர்வும் மனக்கோழையு முடையாரின் குணங்களெனக் கொண்டு இகழ்ந்து ஒதுக்கினார்போலும்! இன்னமும், மாந்தரின் அல்லல்களுக்கெல்லாம் அடிப்படையாவது மிருதுத் தன்மைய (effeminacy) அல்லது பெண்மைக்கு அனுகூலமான கோட்களையுடைய கிறிஸ்துவ மதமென முடித்தனராம். எழில் ததும்பப்பெற்ற தோற்றமே வாழ்க்கை; பூரண சக்தியின் உருவமே எழில்; ஆதலால், வாழ்க்கையின் பொருள், அல்லது லக்ஷியம் பூர்ண சக்தியென வாதித்தனர்.

இச்சமயத்தில், ஷோபெனாரின் "இச்சாசக்தியின் உருவமும், மனத்தின் கற்பிதமுமான இவ்வுலகம்" (The World as Will and Idea) என்ற நூலைப்படித்து, அவருடைய கொள்கைகளை ஒப்பி, அவரை ஓர் பெரிய ஞானியென இவர் புகழ்ந்திருக்கிறார். இவருடைய சித்தாந்தங்கள் அவ்விலக்கியத்தின் மூலப்பொருள்களை ஆதாரமாகக்கொண்டு மிளிர்வன. (தொடரும்.)

T. R. ராஜகோபால்.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 4. அரசியற் படலம்.

[314-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றவ ரளித்த லன்பின் பெற்றி.

ஆள்பவ னல்லன் அளிப்பவ னரசன். நாட்டாமை தம் கையுள் பொருந்திய யாவரும் இக்கட்டுரையின் உண்மை நன்றெனக் கொண்டாடுவாரேனும் செய்கையை அதன் திறம் செலுத்துத லருமை. இது வொன்றிற்கன்றிச் சான்றோர்தம் சிந்தையிற் றிரண்டெழுந்து தொலைநாள் தொட்டுநிலவுகின்ற மூதுரை யாவற்றிற்குமே இவ்விபரீத கதி கிடைக்கின்றது. அவைதாம் நன்று நன்றென இக்காலமாந்தர் சொல்லுவர். அச்சொல்கையோடு அவைபால் தமக்குற்ற கடன் யாவும் கழிந்ததென நினைத்து அதன் கருத்தைத் தம் கருமத்தில் கையாள்வ தின்றி யமையாதெனும் வாய்மையைக் கனவிலும் காணார். மற்று, நனவிலும் இந்நோக்கும் நிலை பெயராதமையுமாயின் அன்னவன்பால் மெய்யாசு உதிக்கக் காண்கின்றோம் அன்பே வழிகாட்ட அறமே துணைசெல்லக் குடிகளுக்குத் தொண்டே பூண்டொழுகின்ற வேந்தன் தோன்றுங் காலத்தில் உலகத்தின்கண் கோவேந்தர் தம் பெருமை தோன்றும். அன்ன புவிசக்ரவர்த்தியொருவனின் இலக்கணத்தைக் கவிசக்ரவர்த்தி வகுக்கின்றானெனின் மெய்விளங்கவரு உறுதிமொழிகள் சில இப்படலத்தின்கண் கேட்பதற்கியலும்.

கல்வியே முளைத்தெழுந்து போகமெனுங் கனி பழுத்த அயோத்திமாநகரத்தில் அரசு வீற்றிருந்து வளையாச் செங்கோல் உலகேழினும் செலுத்திவந்த தன்னேரில்லாத் தயரதப் பெரும்பேர் வேந்தன் பெருமைகளுள்

"இம்மாண் கதைக்கோ ரிறையாய விராமனென்னும்
மொய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தியன்னான்"

ஆயின பாக்கியத்தையே முதன்மையாக நம் கவி நாட்டி வைத்துப் பாராட்டுவார். மூவுலகற்கும் முதல்வனைத் தன் மைந்தனாய்ப்பெற்றதால் தயரதன் பெருமையெய்தினான் என்னின், தந்தை மைந்தன் இருவோரும் கம்பரெனும் கவிவரரால் பாடப்பெற்ற நன்மையாற்றம் பெருமையிற் பின்னுமோர்படி உயர்ந்தவராயினர் என்பதற் கையமில்லை.



அன்னவோர் பெருந்தகை யவனிக் கீசனும் மன்னனின் தன்மையைச் செப்பவருகின்ற நம் கவிஞர்பெருமான் மெய்த்திறம் கண்ட காட்சியாதலின், குல முதல் தொன்மையும், அரண்மனை சிறப்பும் அரியணைச் செல்வமும் சேனையின் மிகுதியும் தொங்கலும் பிச்சமும் முதலாய அரச வைபத்திற் கடையாளமாய பெருமிதச் செய்திகளைப்பற்றி ஒருசொல் ஓதினார் இல்லை. இவ்வகையில் இவர் சும்மாவிருந்த சொல் வன்மையைச் சிந்திக்கச்சிந்திக்க நம் மனமகன்று அவர் எண்ணிய யாவுமே நாமுமெண்ண இடந்தரும். முன்னையோர் மேன்மையும் அடக்கியாளு மாண்மையும் கொற்ற மேவிய கோமகனென் றொருவனைக் காட்டுமே யல்லாது அவன்றன் அழிவிலாப் புகழிற்கேனும் குறைவிலாவகையுயிர்களைக் காக்கின்ற காவலிற்கேனும் ஈடாகி நின்ற பெரும் பொருள்களோ வாகமாட்டா. அரசனொருவன் தன்னால் ஆற்றுதற்குரிய கடன்களை மறந்தானன்றே தனக்குற்ற அதிகாரத்தையும் செல்வத்தால் வருஞ் சாதனங்களையும் நினைப்பவனாகின்றான். தயரதன் தன் கடமையை எந்நாளும் மறந்திலன். அக்கடமைநின்றவன் வழுவாது காப்பதற்குரிய நற்குணங்களின் நினைவே கம்பருக்கு முதலில் வருகின்றது. ஆதலால் கூறுவார் :—

ஆதிம் மதியும் மருளும்மற னும்மமைவும்
ஏதின் மிடல்வீ ரமுமீகையு மெண்ணில்யாவும்
நீதிந் நிலையும் மிவைநேமியி னோர்க்குநின்ற
பாதிம் முழுதும் மிவர்க்கேபணி கேட்பமன்னோ.

[எப்பொருளையும் வெளித்தோற்றத்தி னளவில் மயங்காது அதன் மூலத்தன்மையை ஆராயும் அறிவும், அருளும், அறமும், பெருமையும் பழிப்பிலா வலியமைந்த வீரமும், ஈகையும், இவையனைய எண்ணரிய நற்குணங்கள் யாவும், நீதிதவறாத நடுநிலையும் மற்ற அரசர்க்கு அஃதனில் பாதியே இருந்ததென எண்ணும்படி இவ்வரசன்பால் முழு அளவும் பூர்த்தியாய் எய்தியிருந்து அவனிட்ட ஏவலைச் செய்திருந்தன.]

புகழ்வதெனின் ஒருவனைக் கம்பர் இதன்மேலினி இல்லை யெனும் வண்ணம் புகழ்ந்துவிடுவர். மனுமாந்தாதா ரகு சிபி இக்ஷுவாகு அனைய கதிரவன் குலத்து வேந்தர்க்கு இக்குணங்கள் குறைவின்றி இருந்தன வென்று கண்டதெல்லாம் தயரதன் தோன்றிய பின்றைப் பாதியேயாய்த் தோன்றின வென்னின் நிறைவிற்கு மிதன்மேலொரு எல்லை நினைத்தற்கியலாது. உரோமபத மன்னன் தன் மருகனாய கலைக்கோட்டு முனிவரர்க்குத் தயரதனை அறிமுகம் செய்துவைத்த செவ்வியில்,

"புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
பெருந்தகைதன் புகழிற் பூத்த
அறனொன்றுந் திருமனத்தான்........."

என்றே ஏற்றும்படி பாடுவார் நம்கவி. தஞ்சமென்றடைந்த வோர் புறவின் இன்னுயிர்க்குத் தன்னுயிரை ஈடாக வழங்கிய சிபி சக்ரவர்த்தியின் பெரும் புகழையொரு படர்கின்ற கொடியேயாக்கி, அக்கொடியீன்ற மலரென்னத் தோன்றிய தயரதனின் திறம் எத்துணையாதல் வேண்டும்.

இதுவொன்றோ! ஆதிமதிமுதல் நீதிநிலை ஈறாய நற்குணங்களை உடையவனாயிருந்தனன் என்று கூற நம் கவிக்கு மனம் வரவில்லை. அவைதாம் இவன் இட்ட பணிகேட்கும் என்றார். நற்குணங்களேனும் அவைகளை இவனது உடமையாக்குதலில் ஓர் குறையுளது. ஒரு பொருளை ஒருவன் உடைத்தாயிருக்கின்றான் என்பது வழக்கேனும், வாய்மையே நோக்கின் பொருள்கள்தாம் அவனை உடைத்தாயிருக்கின்றன. உடைமைக்கே உடையோன் அடிமை என்பது வித்தகர் கண்ட தத்துவம். பணத்தால் பெரியவன், என்றொருவனைக் குறிக்கின்ற காலையில் பணம் அவனைவிட மேலானதொன்று என்பது ஏற்படுவது போலவே 'குணத்தால் பெரியவன்' என்று கூறினாலும் குறிக்கப்பட்டவனது இயற்கைப்பெருமை இன்மையாகிக் குணமெனும் செயற்கைப் பொருளே விஞ்சுகின்றது. இது காக்கவோ கம்பர், குணங்களையுமே பணித்தொழில் புரிவித்து முன், 'உயர்வினோடு உயர்ந்தென்று' பொன் மதிலைச் சிறப்பித்தது போன்றவொரு சூழ்ச்சியால் 'தன்னாலே தான் பெரியன்' தயரதனென்று சாற்றினார்.

பின்வருஞ் செய்யுள் இத்தயரதன் செய்த செயல்கள் எவையெனக் கூறுகின்றது. தானமும் யாகமுமே முன்னிற்கின்றன.

மொய்யார் கலிசூழ் முதுபாரின் முகந்துதானக்
கையார் புனலா னனையாதன கையுமில்லை
மெய்யாய வேதத் துறைவேந்தருக் கேய்ந்தயாரும்
செய்யாத யாக மிவன்செய்து மறந்தமாதோ.

[அலையடர்ந்த கடல்சூழ்ந்த இத்தொல்லுலகில் இவன் கை நிறைய மொண்டு தானப்பொருளோடுத் தாரை வார்த்தளித்த நீரினால் நனையாத கை இல்லை. சத்திய வேதத்தின்படி ஒழுகும் வேந்தருக்கு உரிய பல பிறர் செய்யாப் பெரிய யாகங்கள் யாவும் இவன் செய்து மறந்தனவே].

இன்ன தன்மையனாகிய தயரதன் உயிர்நனி புரக்கும் செம்மையைச் செப்புகின்ற பாசுரம் இதற்கடுத்து வருகின்றது :—

தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்குநீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னோன்.

[அன்பிலே அத்தயரதன் எவருக்கும் அவரவர் தாயை ஒப்பான். நன்மைகளை விளைவிப்பதில் எவருக்கும் அவன் அவரவர் செய்துள தவத்திற்குச் சமானமாவான். எவருக்கும் இவன் நோய் ஒப்பான் எனின் அந்நோயின் மருந்தையும் ஒப்பான். நுண்ணிய விஷயங்களை ஆராயப் புகுகின்றகாலத்து எவரெவர்க்கும் அவரவர் அறிவேபோல் உதவுவான்.]

இக்கருத்துக்களின் மெய்நிலை நுணுக்கத்தை ஆராயுமாறு நாம் மிகநெருங்கி அவைகளோடு பயிலவேண்டி வருகின்றது. தன்தேயும் தன்னாட்டார் தன்மக்கள் என்னும் நோக்கம் தாழ்ந்தார்மாட்டே தலையெடுக்கும். அண்மியர் அகன்றவர் என்ற பிரிவும் நண்ணினர் நண்ணலர் என்னும் நினைவும் முன்சொன்ன நோக்கங்களோடு ஆள்கின்ற அரசனுக்கே அமைவனவன்றிக் காக்கின்ற காவலற்கு ஒருபோதும் நேர்மையனவாகா. ஆள்கைக்கும் அதிகாரத்திற்குமே, அளவிலும் செலுத்தும் வகையிலும் செல்கின்ற தூரத்திலும் எல்லையுளது. அன்பிற்கு அஃதில்லை யாதலால் அவ்வன்புருவாய மெய்வேந்தர் தம் செயற்பயனை தேயத்தின் அளவூடே சுருக்கிக் கொள்ளார். ஆதலால் தாய்போலும் தவம்போலும் சேய்போலும் அவரவர் அறிவேபோலும் தயரதன் ஆயது கோசலக் குடிசனங்களுக்கு மாத்திரமேயன்று. அவர்களுள் தன்னை அண்டினவர்க்கு மாத்திரமே யன்று. உலகடங்கலும் எத்திறத்தோர்க்கும் இவன் உதவியாயினான் என்பதை நாம் மறவாதிருப்பதற்கே எவர்க்கும் என்று கம்பர் எடுத்துக்காட்டுகின்றார். உத்தமர்க்குத் தந்நாடென்று வரையறைபிட்ட விலங்கு மாட்ட இயலாது. பெருமைசால் புரவலன் தான் மனிதனென்பதை

முன்னே நினைக்கின்றான், அரசனாவது பின்னே. அவன் பார்வையும் பயனும் புவியடங்கலும் பரவும்.

எனின், தயாதன் யாவருக்கும் எவ்விதம் அமைந்து அரசனால் உறும் உதவியை ஆற்றினான் என ஆராயுங் கால், அறம் பொருள் இன்பம் வீடு ஆய நால்வித நலங்களும் யாவருக்கும் அவன் பயக்கும் பெற்றியனாயினானென்பது தெரியவருகின்றது. இது தெரிவதற்கு அவைகளின் உண்மைத் தன்மையை ஓதிய ஔவையார் பாட்டினை இங்கு நினைத்துக்கொள்வது நலமாம்:—

> ஈதலறந் தீவினை விட்டீட் டுதல்பொருள்
> காதன் மனையாளுங் காதலனுந்—தீதின்றிப்
> பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

[அறம் என்பது ஈகையே. நற்கருமங்களால் சம்பாதித்தது பொருள். அன்புடைய நாயகனும் மனைவியும் பழிப்பிலா வகையில் சேர்ந்தது இன்பம். பரகதியை நினைத்து இவைமூன்றையும் விட்ட வொருநிலையே வீடு.]

எனவே தயாதன், அவரவர் புரியும் அறத்திற்கும், ஈட்டும் பொருளிற்கும், துய்க்கும் இன்பத்திற்கும் எய்தும் வீட்டினிற்கும், காரணனாயமைந்தானாகின்றான். அவ்வாறாய தெப்படி என்பதை இச்செய்யுளான் தோய்ந்து சோதிக்குங் காலையில் மேன்மையாய வாய்மைகளும் வேந்தனின் பெருமையும் கம்பரின் கவித்திறமும் விளங்க வருகின்றன.

மாந்தர்பால் தயாதன் தாயொத்த அன்பு பூண்டு ஒழுகிய முறையினாலே அவர்களை அவன் அறத்தாறு உய்த்தனன் என்பது முதற்செய்தி. ஈதலே அறம் என்றனர் ஔவையார். ஆயின் மக்கள் யாவரும் வள்ளலர்களாய் வழங்கும் வண்ணம் தயாதன் அமைவித்து அவர்களுக்கு அறவாழ்க்கை செய்வித்தான். தாயொத்த அன்பினன், என்று கூறியவாற்றால் இப்பொருளெய்திய தெங்ஙனமெனத் துணித லருமையன்று. வெளவுதற்கு அவா காரணமாதல்போல் ஈதலாதிய அறங்களுக்குஅன்பு ஆதாரமாகின்றது. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகு அன்பினராய் யாவரும் அமையுமாறு தயாதன் ஆக்கிவைத்தனன் எனின் அவ்வன்பினாலவ ரீவாராகி யறமாற்றுவார். மற்றவரை யன்புபொலியும் சிந்தையினராக்குதற்கு ஏற்ற வழியொன்றே. அது யாதெனில், நாம் அவர்கள்பால் அளவற்ற அன்புகூர்ந்திருப்பதே யாகும். அளிப்போர் பெறுவோர் இருதிறத்தும் நந்தா நலங்களை நிகழ்த்துவது அன்பெனும் பெருவரம். பேரன்பு ஒருவன் பிறர்பால் பெற்றானெனின் அவன் மற்றவர்க்கும் அதனை முறையே செலுத்தாநிரான். சில மனைகளில் பெற்றோர்கள் தம்மக்களைக் கண்டதற்கெல்லாம் கடுஞ்சொற்கொண்டு தகையாமலும் அடியாமலும் அன்போடு ஆதரித்துவளர்க்கின்றனர். மற்றுஞ் சில மனைகளில் சீறிய சொற்களும் வெடுவெடுத்த முகமுமன்றித் தம் பெற்றோர்பால் அன்பிற்கியன்ற நலம் யாவும் பெறாமலே சிறுவர் வளரக்காண்கின்றோம். அன்பினூடு வளர்ந்த முதன்மனைச் சிறுவர் பிறரிடத்து அன்போடு நடந்துகொள்பாரவர். வாயாலும் கையாலும் இடியுண்டு வளர்ந்த பிள்ளைகளோ தாமும் அன்பிலாத் தன்மையராய் வளர்வர். பெரும்பாலும் இச்செய்தி யாவர்தம் அனுபவத்திற்கும் ஒத்ததாயிருக்கும். பெற்றோர் பிள்ளைகளென்னும் தொடர்பினில் மாத்திரமல்லாது மனிதருக்குள் அமைகின்ற மற்றெல்லாவித உறவிலும் இந்நிகழ்ச்சியின் உண்மையை ஆராய்ந்தறியலாம். ஆதலால் நாமொருவருக்கு அன்புகாட்டினால் அவர் நமக்கு எதிரன்பு செலுத்துவது ஒருபுறமிருக்க, அவர் மற்றவர்மாட்டும் அன்புடையராக நேரிடும். நாமும் பிறரும், நாம் பிறர்மாட்டும், பிறர் நம்மாட்டும், பிறர் பிறர்மாட்டும், மறத்தினை அகற்றி அறத்தினை நிலைபெறச் செய்யும் அகன்ற பெற்றியது அன்பு. அன்பினது அகலம் இத்தன்மையதென்பதையும், அறத்திற்கு அது ஆதாரமாவதையும் திருவள்ளுவ நாயனார்,

> "அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
> மறத்திற்கு மஃதே துணை"

என்னுங் குறளில் புகட்டிவைத்த வாய்மை இங்கு நாம் இதுகாறும் கூறிவந்த விடயத்தை வலியுறுத்தும். மற்றினிக் கூறுவானேன். தாயிற் சிறந்த தலையன்பு வேறில்லை. அவ்வன்பை அரசன் யாவருக்கும் அளித்ததால் அவர்கள் தாமும் அன்புடைய சிந்தையராயினர். மறம் அகன்றது. வாழ்க்கையின் முதற் பேறாகிய அறம் எய்தினர்.

வேண்டியவேண்டியாங் கெய்துதல்தவத்தினாலாதலால், மாந்தர்கள் தீவினைவிட்டுப் பொருள் ஈட்டுதற்குத் தயாதன் துணைநின்ற தன்மையை அவன் யாவருக்கும் அவரவர்செய்த தவத்தை ஒத்தனன் என்று எடுத்துக் காட்டுதனினும் பொருத்தமாய வோர் உவமை தேடியமைத்தலரிதென்பது வெளிப்படை.

அறத்தோடும் பொருளோடும் இனிவரும் இன்பத்தோடும் இம்மையைக் குறித்த நினைவிலேயே மாந்தர் நின்றுவிடாமல் மறுமைக்குற்ற கதியையும் அவர் தொடர்ந்து நடப்பதற்கு ஏற்ற சாதனங்களையும் தயாதன் அமைத்து வைத்தான். இதனையே கம்பர், 'சேயொக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கு நீரால்' என்று காட்டினார். பரகதி ஒருவருக்குப் பயக்குவிப்பாரில் சேயனைய உதவிபுரிவார் வேறில்லை. இருவினையும் விட்டிடினே வீடு எய்தும். தீவினை செய்வார்க்கு அந்நெறி விட்டகன்று ஒழுகல் எத்துணை கட்டமோ, அத்துணை கட்டம் அறஞ்செய் மாக்களும் அவ்வறவினையை விடுதற்கும் படுவார் திண்ணம். பரனை நினைந்து அறத்தையும் விடுதற்குப் புத்திரன் உபகாரமாகின்றான். பொருட் பற்று ஒருவாறு நீங்குதற்கும் அவனே துணை. அறமும் பொருளும் பெரிது செய்வார் தம்மோடு அவைகளும் முடிவடையும் என்னும் கருத்துடையவராயின் ஏக்கம் எய்தி எக்காலும் அந்நினைவே அழுந்தியவராயிருப்பர். தம்மிற்பின் அறத்தினைத் தொடர்ந்தாற்ற வொருவன் தோன்றியுளான் என்பதறிந்தால் அவ்வறத்தின்பால் தமக்குள்ள பற்றை அகற்றிக் கொள்வது ஒருவகையில் எளிதாகும். சரீரத்தால் மாத்திரமல்லாது செய்கையினும் சரித்திரத்திலும் தந்தைமார் தொடர்ச்சியே அவரவர் மக்கள் ஆகின்றார். புத்திரர் பெற்ற வொருவன் தன்னையே பெருக்கிக் கொள்கின்றான். இவ்வாறு பெருகப் பெருக அவனுக்குள்ள இம்மைப்பற்று வகுக்கப் படுகின்றது. எனின், புத்திரர் பெறாதார் வீடெய்த இயலாதென்பது சாத்திரத்திற்கு மாத்திரமன்றி மானுட இயற்கைக்கும் சம்மதமான கொள்கையென உணருவோம். ஆகையால் இம்மைக்கியன்ற வாழ்க்கையினிடையே மறுமைக்குரிய நினைவினில் வைகுமாறு வேண்டியன புரியும் தன்மையில் தயாதன் அவரவர் புத்திரர்களுக்கு நிகராயினன்.

T. N. சேஷாசலம்.



# பழமுதிர்சோலை.

## ஈவார் திறம்.

> "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்"

என்று இடைக்காடர் பாராட்டிய திருக்குறளினிடத்து விளங்குஞ் 'சுருங்கச் சொல்லல்' என்னு மழகு மற்றெந்த நூலினும் அத்துணை காண்பதரிது. ஒவ்வொரு சிறு குறளும் மிக விரிந்த தத்துவங்களைத் தன்னிடத் தடக்கிக் கொண்டிருப்பது அதைப் படித்தோர் யாவரும் அறிந்த விஷயம். ஆனால் நுணுகியாராய்ந்து நோக்குமிடத்துச் சிற்சில குறட்பாக்கள் பலதிறப்பொருள் தந்து, எடுத்துக்கொண்ட விஷயத்துக் கேற்ற பல கருத்துக்களைப் புலப்படுத்து மருமையை எம்மோடு வியந்து களிக்க நண்பர்காள் வம்மின்.

இல்லை யென்று வந்திரப்போர்க்கு உடையோர் கொடுத்துதவுதலை நாயனார் 'ஒப்புரவறிதல்', 'ஈகை' என்று இரண்டு பாகுபாடு செய்துகொண்டு முன்னதால் இரந்துவந்தார் யாவர்க்கும் வேண்டிய வேண்டியாங்கு கொடுக்குமாற்றல் இல்லார் பலராதலால் பொதுப்பட ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கும் வருவாயினளவுக்கு மேற்பத் தக்கார்க்குத் தக்கன வறிந்து கொடுத்தல் ஆவசிகமென்று கூறி, அடுத்த 'ஈகை' யென்னு மதிகாரத்தில் யாசிப்பவர் எதை விரும்பினும் இல்லை யென்னாது அவற்றைக் கொடுக்கும் வள்ளலார் தன்மையை விளக்குகின்றார்.

வரையாது வறிஞர்க்கீயும் வள்ளாண்மையைப் பேசுமிடத்து, அதனிலக்கணத்தையும், கொடுப்போர் கொடுக்க வேண்டிய முறையையும், முடிவுற இதன் அடியிற் கண்ட குறட்பாவில் நாயனார் இனிது விளக்கி யிருக்கின்றார். அவற்றை யெல்லாம் உணருமாறு இக்குறளை யெடுத்தாராய்வாம்.

> "இலனென்னு மெவ்வமு ரையாமை யீதல்
> குலனுடையான் கண்ணே யுள."

ஒன்றுமில்லாத தரித்திரனொருவன் தம்மிடத்து இரந்துவந்தால், கடுஞ்சொற்கூறி அவனை யிழித் திகழாது அவன் இன்மைக் கிரங்கி, கொடுப்பது கொஞ்சமாயினும், இனிய முகத்தினராய் இன்சொற் கூறி ஈதலே நற்குலத்திற் பிறந்த மேன்மக்க ளியல்பாம். இங்கு 'இலன் என்னு மெவ்வமுரையாமை யீதல்' - என்பதற்கு, இவன் வறிஞனென்று நிந்தை மொழிகூறி அவனை யிகழாது "பழங்கணோடிரந்தவர் பரிவுதீர்தர" வழங்கவேண்டும் என்பது பொருள்.

அன்றியும், கொடுப்போர் நேரில் அவனை நிந்திக்காமலிருப்பதோடு பிந்தியும் பிறர்கட் பழித்துரையாமலும், தங்கொடையைத் தாமே புகழ்ந்துரைக்காமலும் இருத்தல்வேண்டும். இரப்போரை யிகழ்ந்து பேசு மெண்ணமில்லா திருப்பினும் தம்மைத்தாமே பெருமைப் படுத்திக் கொள்ளும் மமதையால் பலர் தங்கொடையைப் பிறர்க்கெடுத் துரைப்பதையும் அதனோடு கூட யாசித்தவரை அவமதித்துப் பேசுவதையும் யாம் காண்கின்றோம். இது ஒரு பெருங் கெட்ட சுபாவம். இதனைக் கடியவன்றோ "உன் வலது கை கொடுத்தது இடதுகைக்குந் தெரியவேண்டா" என்று சான்றோர் கூறியதும்! இக்கருத்தில் "இலனென்னும் எவ்வமுரையாமை யீதல்" என்பதற்குத் "தன்னை யாசித்துவந்தவன் மிகத்தரித்திரன் என்ற வசைமொழியைத் தான் பிறர்க் கெடுத்துரைக்காமல் கொடுக்கவேண்டும்" என்பது பொருள்.

இனி, இரந்துவந்தவர் தாம் இல்லாத வறியரென்று சொல்லிக்கொள்ள மிகவுங் கூசுவாராகையால், அவ்வாறு அவரைவருந்தச்செய்யாமல் அவரைக்கண்டதும் அவரது இன்மையைக்குறிப்பானுணர்ந்து அவர் குறையை நிரப்புதல் வள்ளியோரின் தன்மையாகும். இந்தக்கருத்தில் 'இலனென்னும் எவ்வமுரையாமை யீதல்' என்பதற்கு "இரப்பவன் (தான் ஒன்றும்) இல்லாதவனென்று வாய் திறந்து சொல்லாமலே அதனையறிந்து ஈதல்" என்று பொருளாம்.

இதனிற் சிறந்த ஈகையாவது இரந்துவந்தவன் பின்னும் பலரிடம் பலகாலுஞ் சென்று இரவாதபடி அவனுடைய சுகவாழ்க்கைக்கு வேண்டிய பொருளை யொருங்கே யுதவி அவனது இலம்பாட்டை யொழித்தலாம். இவ்வுரையில் "இலனென்னும் எவ்வமுரையாமை யீதல்." என்பதற்கு, "தன்னிடத்தொன்றை யாசித்து வந்தவன் தனது இன்மையைப் பிறரிடத்துஞ் சொல்லிச் சென்று வருந்தாதபடி ஈதல்" என்று பொருள்.

இதனினுஞ் சாலச் சிறந்த பெருங்கொடை யாதெனின் யாசித்து வந்த வறிஞனையும் தன்னைப் போன்ற பெருஞ் செல்வனாக்கி, அவனிடத்து யார் வந்து எதை வேண்டினும் அவர்களுக்கில்லை யென்னாது அவனைக் கொடுக்க வல்லவனாக்குதலாம். இதனை

> இலனென்னு மெவ்வம் எனுந்திருக் குறட்குப்
> பலர்பல விதமாப் பகர்ந்த பேருரையுள்
> இரப்பவன் இரக்கப் படுவோ னாகச்
> சுரக்குங் கொடையே சொல்லின் முதற்றாம்

என்ற மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யுரையாலறிக.

இவ்வுரைகளெல்லாம் சிறந்த நற்கொடையி னிலக்கணத்தைக் குறித்தனவாம். இவ்வாறு இரப்பவர்க்கிரங்கி இன்முகமு மின்சொல்லு மீந்து அவர்களுக்கு வேண்டிய பொருளையோ, வரம்பிகந்த நிதியையோ யளித்து அவருடைய வறுமையைத் தீர்ப்பதாகிய வள்ளற்றன்மை யில்லாதவரும், பிறர் தம்மை "இவன் மிக்க செல்வத்தைப் பெற்றிருந்தும் நல்குரவினரைத் தாங்கும் நற்குணமிலன்; தருமசிந்தையிலன்; தயையிலன்" என்றிகழும் வசைமொழிக் கஞ்சியேனும் கொடுத்தல் உயர்குலத்திற் பிறந்த மாணிகளின் செயலாம்" என்ற சாமானியக் கொடையையும் இத்தொடர் குறித்து நிற்கின்றது.

அன்றியும் ஒரு தரித்திரன் தன்னை வந்திரந்த விடத்துத் தன்னிடத்துப் பொருள் உளதாக அதுபொழுது தான் பொருளுடையன் அல்லனெனக் கரக்கும் வச்சையர் சொல்லும் பொய்யுரையையும் இத்திருக்குறள் கடிகின்றது. இக்கருத்துக்களை யெல்லாம அமைத்து:—

> "இறப்பவன் வாளா தேகஇல மெவ்வங் கூறு
> திரப்பினை நிரப்பல் நன்றாம்; இதனினன்றுவதாகும்
> இரப்பவ னிலனென்றா வியம்பிய எவ்வஞ்சொல் லென்
> றிரப்பினும் பிறர்பாற் கூறுதிரக்கமோ டீதல் கண்டாய்;
> அருத்தியின் இலனென்றெ முனளித்தலும்: இலனென் [றப்பால்
> உரைத் திலனாகச்சால வுதவலும்; ஏற்கின்றானும்
> வருத்துற இலனென்னுமை வழங்கிட வரைவில் செல்வம்
> பொருத்தலும் ஒன்றினென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.
> நலமிகு செல்வம்பெற்று நல்குரவினரைக் காத்தல்
> இலன், அறமாதி கீர்த்தியிலன், எனப் பிறர்சொ லெவ்வ
> வலனுரைக் கஞ்சியேனும், வறியனை இலனென் றெள்ளா
> தலர் புகழ் பயனும் வேண்டினுக்கையு மளித்தனன்றாம்."

எனக் கச்சியப்ப முனிவர் இக்குறளுக்கு விரிவுரை யெழுதி விளக்கியிருத்தல் காண்க.

"கபரி"

(6) ஸ்ரீமத் வால்மீகி

# இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. | 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை



லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் **4.** வெளிநாடுகளுக்கு ரூபாய் **6.**

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம். (7)

# யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்

(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ஆம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281, ஸ்டார் அண்டு கம்பனி
10, மக்லீன் தெரு, சென்னை. மானேஜர்கள்.



# வர்த்தமானம்.

**சோவியாவில் பூகம்பம்:**—சோவியா தேசத்தில் மறுபடியும் விலிப்போப் போலிஸ் என்ற இடத்தில் பூகம்ப அதிர்ச்சி உண்டாகி அதிக நஷ்டம் ஏற்பட்டிருப்பதுடன் அனேகர் தங்குவதற்கு இடம்இல்லாமலும் 8,000 குடும்பத்தினர் வீடுகள் இல்லாமலும் தவிக்கிறார்களாம்.

***

**மோட்டார் வண்டியின் வேகம்:**—இதுவரையிலும் காப்டன் மால்கம் என்பவர் அடைந்திருந்த வேகமே உலகத்தில் மோட்டார் வண்டியின் சிறந்த வேகமாயிருந்தது. இப்போரே கீச் என்பர் தமது 60 சிலிண்டர் வண்டியை மணிக்கு $207\frac{1}{2}$ மைல்வீதம் விட்டு முந்தி அடைந்திருந்த வேகத்தைப் பின்னுக்கிவிட்டாராம்.

***

**இடியினால் விபத்து:**— திருப்பூருக்குச் சமீபத்திலுள்ள தவிட்டுப் பாளையம் என்னும் கிராமத்தில் ஒரு தென்னை மரத்தில் இடிவிழுந்துதென்னை பற்றி எரிந்து அத்தீ பக்கத்திலுள்ள ஆதிதிராவிடர்களுடைய குடிசைகளில் பரவி 90 குடிசைகள்வரையில் எரிந்துபோய்விட்டன. இதன் காரணமாக 300 பேர்வரையில் வீடு இல்லாமல் சகல சொத்துக்களையும் இழந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

***

**பண்டைய குகைகள்:**—கொச்சினல் மர்கலம் என்ற இடத்திலுள்ள வேலி காட்டுபகவதி கோயிலுக்கருகாமையில் பழையகாலத்துச் சவம் புதைக்கும் பெரியபாண்டங்களுள்ளகுகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். இரண்டுமாசத்துக்குமுன் குகா என்பவர் வணியேம்பரா என்றஇடத்தில் இதேமாதிரியான ஒருபெரிய மட்பாண்டம் கண்டெடுத்தார். இப்பாண்டங்கள் மூவாயிர வருஷங்களுக்கு முற்பட்டனவென்று எண்ணுகிறார்கள்.

***

**பட்லர் கமிட்டி:**—சுதேச அரசாங்கங்களைச் சீர்படுத்துவதற்காக வேண்டிய விசாரணை செய்யும்படி ஏற்படுத்திய இக்கமிட்டியார் பம்பாயில் விசாரணை முடித்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்றிருக்கிறார்கள். எழுபது சுதேச அரசர்கள் இதுவிஷயமாய்ப் பம்பாய்க்குப்போயிருந்தார்கள். எல்லா அரசர்கக்குளும் சம்மதமான உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

***

**நெசவுக்காரரின் கைப்பெருவிரலை வெட்டியது:**—என்னும் தலைப்பின்கீழ் மகாத்மா காந்தி யங் இந்தியா என்னும் அவர் பத்திரிகையில், எவ்விதம் சென்ற நூற்றாண்டுக்குமுன் பிரபலமாய் இத்தேசத்தில் நடந்த நெசவுத் தொழில் அற்றுப்போய் விட்டதென்பதையும் ராமேஸ்சந்திரடட் என்பவரால் எழுதப்பட்டுள்ள சரித்திரத்தின் துணைகொண்டு மிகவிவரமாய் எடுத்துக்காட்டித் தற்காலம் நமதுதேசத்தில் மறுபடியும் நெசவுத் தொழிலைப்பரவச்செய்யவேண்டியது அவசியம் என்றுசொல்லியிருக்கிறார்.

***

**பம்பாயில் நெசவு ஆலைகள் வேலை நிறுத்தம்:**—இன்னும் ஒரு ஒழுங்குக்கும் வரவில்லை. 30,000 தொழிலாளர் வேலையில்லாமல் நின்றுவிட்டார்கள். டிலைல் ரோட்டிலிருக்கும் நாற்பது ஆலைகளில் பதினொன்றில்தான் வேலை நடக்கிறது. இதுவரையிலும் அமைதியாயிருந்த வேலையாட்கள் குழப்பங்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆலைகள்மேல் கல்லெறிந்ததற்காகப் போலீசார் சிலரைக் கைது செய்திருக்கிறார்கள். ஷோலாப்பூரிலும் மூன்று ஆலைகளில் வேலையாட்கள் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டதாகத் தெரிகிறது.

**மடாதிபதிகளின் மகாசபை:**— மைசூர் ராச்சியத்தில் முக்கியமான இரண்டு மடங்களின் மடாதிபதிகள் ஒரு பெரிய மகாசபை கூட்டுவதாக ஏற்பாடு செய்திருக்கிறதாகத் தெரிகிறது. இம்மகாசபை சிவசமுத்திரத்தில் இன்னும் ஒருமாதத்தில் கூடவிருக்கிறது. இக்கூட்டத்தில் இந்து மதத்தின் எல்லா வகுப்பினரும் சேர்வார்கள். வெவ்வேறு வகுப்புக்குச் சேர்ந்தவர்கள் வகுப்புமாறி செய்து கொள்ளும் விவாகங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் இந்து மதத்திற்குள் வேறு சமயிகள் சேரலாம் என்றும் பிரசித்திசெய்யவிருக்கிறார்கள்.

***

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி:**—மாயவரத்திலுள்ள திருவழுந்தூரில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி சென்ற ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் கூடியது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் தலைமை வகித்திருந்தார். ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் என்பவர் ராஜிநாமா செய்துவிட்ட காரியதரிசி வேலைக்கு ஸ்ரீமான் மருதவனம் பிள்ளை நியமிக்கப்பட்டார். அகிலஇந்திய கம்மிட்டியில் இதன் காரணமாகக் காலியான இடத்துக்கு ஸ்ரீமான் குழந்தை நியமிக்கப்பட்டார். இந்தக்கூட்டத்தில் சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்யவேண்டியதை மேலும் வற்புறுத்தி அதை நடத்துவதற்காக ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

***

**காங்கிரஸ் கட்டிடம்:**—மதராஸ் காங்கிரஸ் வருமானத்தில்எஞ்சியிருக்கும்75000 ரூபாயில் 50000ரூபாய் செலவுசெய்து சென்னையில் ஒருகாங்கிரஸ்கட்டிடமும் 15000 ரூபாய்செலவுசெய்து மற்றிடங்களில் கட்டிடங்களும் கட்டவேண்டுமென்று தீர்மானம்செய்திருக்கிறார்கள். வேறு சில விஷயங்களும் இந்தக் கூட்டத்தில்பேசி முடிவுசெய்யப்பட்டது.

***

**யுத்தமில்லை:**-உலகத்திலுள்ளதேசங்களுக்கிடையில்யுத்தங்கள் இனிமேல் உண்டாகாமல் தடுக்கவேண்டும் என்னும்நோக்கத்துடன் அமெரிக்கஐக்கியமாகாண அரசாங்கசப்பற்படை அங்கத்தினராகிய கல்லொக் என்பவர் ஒரு மாதிரி உடன்படிக்கை ஒன்றை மற்றைய அரசாங்கங்களுக்கு அனுப்பியிருக்கிறார். அதைத் தழுவி பிரான்சிய அரசாங்கத்தார் ஒருமாதிரி உடன்படிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ஜர்மனியர் முதல் அமெரிக்கரால் வெளியிடப்பட்ட உடன்படிக்கைக்கு வித்தியாசப் படுகிறதென்றும் அமெரிக்க உடன்படிக்கையை அல்லது அதை ஒட்டி ஏற்படும் ஒரு உடன்படிக்கைக்கு ஒத்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாதிரி ஒரு உடன்படிக்கை ஏற்பட்டால் யுத்தம் இல்லாமலே தேசங்களுக்கிடையில் உண்டாகும் விரோதங்கள் தீர்ப்பாய்ப் போகும்.

***

**கிழக்கிந்திய ஆகாயவழிகள்:**—East Indian Airways Ltd., இப்பேர்கொண்ட கம்பனி ஒன்று பம்பாயில் சிலநாட்களுக்குமுன் ஆரம்பமாகி யிருக்கிறது. இவர்கள் ஆகாயவிமானங்களைச் சனங்கள் போக்குவரத்துக்காகப்பம்பாயிலிருந்துகராச்சிக்கும், கராச்சியிலிருந்து டில்லிக்கும், பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கும், பம்பாயிலிருந்து சென்னைக்கும் விட ஒழுங்குகள் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக 30 விமானங்கள் வாங்கியிருக்கிறார்கள். இவை சீக்கிரத்தில் இந்தியாவுக்கு வந்துசேரும். இவைகளைச் செலுத்துபவர்கள் ஆரம்பத்தில் ஐரோப்பியராகத்தான் இருப்பார்கள். ஆனால் பின்னால் கம்பனியின் வேலை ஆட்கள் எல்லாரும் இந்தியராகவே இருக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு ஒரு கூட்டம் வாலிபரை ஐரோப்பாவுக்கு ஆகாய யந்திரங்களைப் பற்றிய பயிற்சிபெறுவதற்காக அனுப்ப நிச்சயித்திருக்கிறார்கள்.

(1) இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[1913 ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய்.

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T.
வேல்ஜி லக்ஷ்மி B. A. L. L. B.
மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.



Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues." Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)